சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 3	இதழ்: 8	ஜனவரி - 2022	விலை - ரூ.10/-
VOL:3	ISSUE: 8	JANUARY - 2022	Rs. 10/-



"ராஜபூஜிதர்"
ஸ்ரீ குழந்தையானந்தர்!

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-3 மலர்-8 ஜனவரி - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி. அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

*எ*திரிகளும், நண்பர்களும், அரசர்களும் ஏழைகளும் எனக்கு ஒன்றே. யாரும் பிறருடைய உழைப்பை வீணாக பயன்படுத்தக் கூடாது. உழைக்கும் தொழிலாளிக்கு உடனடியாகவும், தாராளமாகவும் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.செல்வம் தனிப்பட்ட இன்பத்திற்காக மட்டுமே பயன்படுத்தப் பட்டால், அது வீணாகும்.

ஆன்மீக வளர்ச்சிக்கு மனதை தூய்மைப்படுத்துவது முற்றிலும் அவசியம், மனத்தூய்மை இல்லாது செய்யப்படும் அனைத்து புற வழிபாடும், யோக சாதனங்களும் பயனற்றவை.

அறிவு, பிரசங்கம், பஜனை இவைகள் பக்தியுடன் சேர்ந்து செய்யாவிட்டால் எந்தப் பயனும் இல்லை. முழு பக்தி இருக்கும் இடத்தில் நான் முழுமையாக என்னை அர்பணிக்கின்றேன்.

உங்கள் முந்தைய ஜன்மங்களில் எத்துனை முறைகள் நான் உங்களுடனேயே இருந்திருக்கிறேன்! இன்னும் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் நான் உங்களுடனேயே இருப்பேன்.மீண்டும் மீண்டும் நாம் சந்தித்துக்கொள்வோம்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து இரண்டாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 12.12..2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

இம்மாத இதழை அன்புச்சகோதரி "சாயி காணக்குயில்" திருமதி. ஜெய லெட்சுமி தேவக்குமார் அவர்கள் வெளியிட, "சாயி சேவா ரத்தினம்" அன்புச் சகோதரி திருமதி. சுமதி இராமூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

சாயி பக்தர்களுக்கும், நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழின் வாசகர்களுக்கும், நண்பர்களுக்கும், இனிய ஆங்கிலப் புத்தாண்டு, மற்றும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.

ஐதராபாதை சேர்ந்த "ஸ்ரீ சாயி சேவா பரிவார்" அமைப்பு, தாஸ்கணு மகராஜ் அவர்களின் 59 வது நினைவு தினத்தை ஒட்டி, உலகெங்கும் இருக்கும் சாயி சேவகர்களில் 9 சாயி சேவகர்களை தேர்ந்தெடுத்து விருது வழங்கி கௌரவித்துள்ளார் கள். அதில் நமது ஆசிரியரும் ஒருவர் என்பதில் நமது சாயி





மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ் பெருமை கொள்கின்றது.

ஸ்ரீ சாயி சேவா பரிவார் அமைப்பின் நிறுவனத் தலைவர் திரு. செந்தில் குமார், தெலுங்கானா மாநில செகரெட்டரி திரு.டி.ஆர். மாதவன் ஆகியோருக்கு சாயி மகராஜ் குருவை தேடி இதழ் தன் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.



விருது பெற்ற நமது ஆசிரியருக்கு, நேரிலும், தொலைபேசியிலும் வாழ்த்து தெரிவித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் "சாய் தியானாலயா" சார்பாக மகிழ்ச்சியையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

19.12.21 அன்று குடந்தையில் சீரடி வாசி ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் பங்கேற்ற "திருத்தலங்களைத் தேடி" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டது மனநிறைவை நல்கியது.

11.12.21 அன்று பாபாவின் பக்தையும் நமது குருஜியின் வயது முதிர்ந்த சிஷ்யையுமான திருமதி மோகனா அவர்களின் 90 வது பிறந்த நாள் துரைபாக்கத்தில் நிகழ்ந்தது.

13.12.21 அன்று நமது சாய் தியானாலயா உறுப்பினரும் அன்புச் சகோதரி திருமதி பத்மா நாகராஜ் அவர்கள் சென்னை சண்முகாபுரத்தில்



பகவான் சாயிநாதரின் அருளால் புதுமனை புகுவிழா நடத்தினார்கள்.

இவ்விரு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சிறப்பிக்க பகவான் சாயிநாதர் அனுமதியளித்தார். அவருக்கு எமது நன்றிகள்!

வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் சாய் தியானாலயாவின் அன்னதானக் குழுவினர் அன்னப்பிரசாதம் வழங்கினர். இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் அளிக்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந்தொற்று கட்டுக்குள் வந்து உலக





மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். **மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!**

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

எண்ணிப்பாருங்கள்

நாம் வாழும் பூமியில், இயற்கையில் இருந்தும்,மக்களிடம் இருந்தும், சுற்றுப் புறத்தில் இருந்தும் எவ்வளவு நன்மைகளைப் பெறுகின்றோம் என்று நினைத்துப் பார்க்க வேண்டும். நல்ல கருத்துக்கள், நல்ல உணவு, நல்ல காற்று, நல்ல மழை என்று தொடர்ந்து கிடைத்து வருகின்றன.

நம்மைப் பார்த்து சிரிக்கும் குழந்தையின் சிரிப்புகூட நமக்கு வெகுமதிதான். அச்சிரிப்பை கண்டு இன்பம் அடையும் பொழுது குழந்தையிடம் இருந்து ஒரு நன்மையை பெறுகின்றீர். நீங்கள் அதை திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லவா!

அந்த குழந்தைக்கே, அதே இடத்திலேயே கொடுக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உதாரணமாக, ஒரு மரத்தின் உச்சியில் இருந்து பழம் கிடைத்தால், நீங்கள் மரத்தின் உச்சிக்கே சென்று தண்ணீர் ஊற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. மரத்தின் வேரில் ஊற்றினாலே போதும்.

அதேபோல் குழந்தையிடம் இருந்து பெற்ற சிரிப்புக்குப் பதிலாக எங்காவது ஒரு ஏழைக்கோ, நோயாளிக்கோ, மற்றும் உதவி தேவைப் படுபவருக்கோ, உதவி செய்யலாம். அதன்மூலம் நாம் குழந்தையின் சிரிப்பிற்கு நாம் நன்றி செலுத்துகின் றோம் என்று உணருங்கள்.

நாம் இந்த பூமியில் இருந்து வாங்கிக் கொள்வது எவ்வளவு, திருப்பி செலுத்துவது எவ்வளவு என்பதை எண்ணிப் பாருங்கள்.

MAS மஞ்சு அசோசியேட்ஸ்

G/A- 232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 044 24793822 / 23, 9382163822.
E-mail : kamaraj2306@gmail.com

* எங்களின் சேவைகள்

வங்கி கடன்கள்

- வீட்டுக்கடன்
- அடமானக்கடன்
- வியாபாரக்கடன்



LIC
STAR Health Insurance

இன்சூரன்ஸ்

- LIC & STAR

வருமான வரி தாக்கல்

- டேக்ஸ் ஆடிட்
- NON டேக்ஸ் ஆடிட்



சிறந்த முறையில் செய்து தருகின்றோம்.

மக்கள் சேவையில் 18 வது ஆண்டு..

வாடிக்கையாளர்களுக்கு நன்றி!

எங்கள் நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களை அறிமுகப்படுத்தி வாழ்நாள் முழுவதும் வருமானம் பெறலாம். விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

அன்பிற்கினிய சாய் பக்தர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். சாய் தியானாலயாவில் சாயி லீலா என்ற தொடரின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சாயிபாபாவின் லீலைகளை பேச ஆரம்பித்தால் பேசிக் கொண்டே இருக்கலாம்.

நான் உங்களிடம் பாபாவைப் பற்றி ஆயிரம் கதைகளை கூறலாம். ஆனால் அவர் உங்கள் வாழ்வில் வருகின்றார் என்றால், அவரே உங்களிடம் நேரடி அனுபவங்களை ஏற்படுத்திக் கொண்டு உங்களிடம் வருவார். இது நிதர்சனமான உண்மை. இதை ஒவ்வொரு சாய் பக்தரும் அவர்களின் வாழ்க்கையில் உணர்ந்திருப்பார்கள்.

கோடிக்கணகான சாயி பக்தர்களுக்கும் அவரவர்களுக்கென்று தனிதனியாக சாயி லீலைகளைப் பற்றி அனுபவங்கள் இருக்கும். அந்த அனுபவங்களை பேசினால் ஆயுள் போதாது. ஆயினும் அதுவே நமது பிறவித் துன்பம் போக்கும் கருவியல்லவா?

என் கதைகளை கூறுகின்றவருடைய, கேட்கின்றவர்களுடைய, எல்லா விரு ப்பங்களையும் நிறைவேற்றி நம்மை வாழ்வின் லட்சியங்களை அடையச் செய்கின்றார் நம் சாயிநாதன். என்ற சத்சரித வரிகளுக்கேற்ப, எங்களது குரு ஸ்ரீராம் சாய் அவர்களால் நிறுவப்பட்ட "சாய் தியானாலயாவில்" நமது பகவான்



சாயிநாதர் நடத்திய லீலா விநோதங்களை மாதாமாதம் இத்தொடரில் நீங்கள் படித்து மகிழலாம்.

கடந்த இருபது ஆண்டுகளாக மக்க ளுக்கு யோகா, தியானம் போன்றவற்றை கற்றுத் தந்து கொண்டிருந்த குருஜி அவர்களால் சென்னை அயனாவரத்தில் 2014 ஆம் ஆண்டு "சாய் தியானாலயா" ஆரம்பிக்கப்பட்டது.

அதன்பிறகு தியான மையத்தில் பாபாவின் பூஜை, ஆரத்தி, சத்சங்கம், அன்னதானம், சாயியின் புகழ் பரப்பும் மாத இதழ், போன்றவைகள் படிப்படியாக தொடங்கப்படுவதற்கு பாபா எப்படி லீலை புரிந்தார் என்பதையும், மன்றத்திற்கு வரும் பாபாவின் தொண்டர்களுக்கு நிகழ்ந்த பாபாவின் லீலைகளையும் தொகுத்து எழுதுவதற்கு அனுமதி அளித்த பகவான்

ஸ்ரீ சாயி நாதருக்கும், எனது குரு ஸ்ரீராம் அவர்களுக்கும், எனது முதற்கண் நன்றியினை தெரிவித்து கொண்டு தொடங்குகின்றேன்.

லீலை: 1. இரட்டைக் குழந்தைகள்.

நமது சபைக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமானவர் சகோதரி சரண்யா ஞானமூர்த்தி அவர்கள். நமது சபையின் பல தூண்களில் அவரும் ஒருவர். அவரது வளைகாப்பு நிகழ்வு (அதுவும் சாயியின் லீலையே அந்தக் கதையை பின்னால் பார்ப்போம்) சென்னை வில்லிவாக்கத்தில் நடந்தது. அதில் குருஜி கலந்து கொண்ட போது, அவர்களது உறவினரான திருவண் ணாமலையைச் சேர்ந்த திரு. சீனிவாசன் மகாலட்சுமி தம்பதியினரை குருஜியிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் குரு பாபாவிடம் இருந்து உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அவர்களும் எங்களுக்கு திருமணமாகி ஏழு ஆண்டுகளாகியும் குழந்தை இல்லை. மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் பாபாதான் எங்களுக்கு குழந்தை வரம் தர வேண்டும் என்று முறையிட்டனர்.

மருத்துவர்கள் யார் உங்களுக்கு குழந்தை இல்லை என்று சொல்வதற்கு, நிச்சயம் உங்களுக்கு குழந்தைச் செல்வம் உண்டு. பாபாவின் அருளால் அடுத்த ஆண்டு உங்களுக்கு குழந்தை பிறக்கும் என்று வாக்களித்தார்.

அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றனர் தம்பதிகள். ஒன்றும் செய்ய வேண்டாம் நம்பிக்கையுடன், பொறுமையாக இருங்கள். அதுவரை சாயி மகராஜ் குருவை தேடி என்ற ஆன்மீக மாத இதழை பத்து புத்தங்கள் வாங்கி பக்தர்களுக்கு வழங்குங்கள். என்றார் குரு.

பல மருத்துவ சோதனைகளுக்குப் பின் உங்களுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என்று மருத்துவர்கள் கைவிட்டபோதும், நமது பகவான் சாயிநாதரை சரணடைந்தால் கிட்டாது போகுமா என்ன? கர்ம வினைகள் நீங்கியவர்களே சாயி நாதனை வணங்கு கின்றார்கள். அப்பேற்பட்டவர்களே சாயிநாதனை பணிந்து தமக்கு தேவையானதை பெறுகின்றனர்.

தம்பதிகள் நமது இதழை மாதந்தோறும் பெற்று தாங்கள் வசிக்கும் திருவண்ணாமலையில் பக்தர்களுக்கு விநியோகித்து தங்களது கர்ம வினையின் பாதிப்பை குறைத்துக் கொண்டார்கள்.

இங்கே தான் சாயி தன் லீலையை ஆரம்பிக்கின்றார். மாதா மாதம் வாசகர் களுக்குச் செல்ல வேண்டிய புத்தகங்களை குருவே பேக்கிங் செய்து அனுப்புவது வழக்கம். அந்த மாதம் தம்பதிகளுக்குச் செல்ல வேண்டிய பத்து புத்தகங்களை அவரே பேக்கிங் செய்து அனுப்புகின்றார்.

பத்து புத்தகங்கள் அரை கிலோ வரும். அதற்கு தபால் செலவு 20 ரூபாய். அரை கிலோவிற்கு மேலே சென்று விட்டால் செலவு ரூ.40 ஆகிவிடும். எனவே கவனமாக 10 புத்தகங்களை மட்டுமே பேக்கிங் செய்து அனுப்புவது வழக்கம்.

அந்த மாதம் தம்பதிகளுக்கு புத்தகம் போய் சேர்ந்து விட்டது. சகோதரி மகாலட்சுமி அவர்கள் பார்சலைப் பிரித் துப்பார்க்க அதில் 11 புத்தகங்கள் இருந்ததும், எப்போதும் 10 புத்தகங்கள் தானே அனுப்புவார்கள். இந்த மாதம் 11 புத்தகங்கள் அனுப்பியுள்ளார்களே என்று சந்தேகப்பட்டு, சகோதரி சரண்யாவிடம் தொலைபேசியில் சாய்ராம் அண்ணாவிடம் எத்தனை புத்தகங்கள் அனுப்பினீர்கள் என்று கேட்டுச் சொல்லவும் என்று கூற



சரண்யாவும் குருவிடம் கேட்க, அவரோ 10 புத்தகம்தான் அனுப்பியதாக கூறி 10 புத்தகத்திற்குமேல் 1 புத்தகம் கூட அனுப்பினாலும் தபால் கட்டணம் அதிகமாகிவிடும் என்று விளக்கிக் கூறியிருக்கின்றார்கள்.

உடனே சகோதரி மகாலட்சுமி அவர்கள் 11 புத்தகங்களையும் எண்ணுவ தற்கு வசதியாக விரித்து வைத்து புகைப்படம் எடுத்து வாட்ஸ்அப்பில் சரண்யா அவர்களுக்கு அனுப்பி, 11 புத்தகங்கள் இருப்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். புகைப்படத்தை சோதித் துப்பார்த்த சரண்யா 10 புத்தகத்திற்கு மேல் அனுப் பவில்லை என்று சாய்ராம் நம்பிக்கையாகச் சொல்கிறார்.எனவே, மீண்டும் ஒரு முறை எண்ணிப்பார்க்கச் சொல்ல, மகாலட்சுமியும் சரி என்று மீண்டும் ஒரு முறை எண்ண அப்போதுதான் பாபாவின் லீலை வெளிப்பட்டிருக்கின்றது.

இப்போது அதில் 12 புத்தகம் இருப்பதை கண்ட மகாலட்சுமி வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டார். மீண்டும் சரண்யாவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பதட்டமாக, இப்போது 12 புத்தகம் இருப்பதாகச் சொல்ல, சரண்யா குருவிடம் செய்தியை கூற, அவரோ சட்டென்று இது சாயிநாதரின் லீலை என்பதைப் புரிந்து கொண்டு, உணர்ச்சிவசப்பட வேண்டாம். மகாலட்சு மிக்கு, பாபா இரட்டைக் குழந்தைகளை கொடுக்கப் போகின்றார். அதற்காகத்தான் இரண்டு புத்தகங்களை அதிகமாக்கி கொடுத்திருக்கின்றார் என்று விளக்கினார்.

பொங்கிப் பாயும் நதியும் பொய்துப் போகலாம், வான் மழையும் கூட பொய்த்துப்

போகலாம் சாயியின் வாக்கு பொய்யாகுமா? விரைவிலேயே சகோதரி மகாலட்சுமி சீனுவாசன் பாபாவின் கருணையினால் கருவுற்றார்கள். அவர்களுக்கு எப்போது குழந்தை பிறந்தது. அது, ஒரு குழந்தையா, இரட்டைக் குழந்தையா என்பதை தெரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் சகோதரி சரண்யா ஞானமூர்த்தியின் அனுபவங்களை தெரிந்து கொண்டால் தான் முடியும்.

சரண்யா அவர்கள் சிறுவயது முதலே பாபாவின் பக்தை. பாபாவின் அருளினாலே திருமணம் நடைபெற்றது. குழந்தை பாக்கியம் சற்றே தள்ளிப்போனதால் குருவின் மூலம் பாபாவிடம் பிரார்த்தனை வைக்கப்பட்டது. இருப்பினும் காலம் கடந்தும் குழந்தை பாக்கியம் கிட்டாததினால் சகோதரி மனவருத்தத்தில் இருந்தார்.

அந்த சமயத்தில் சாய் தியானாலயாவின் சார்பாக குருவின் தலைமையில் மன்ற உறுப்பினர்கள் 40 பேர் இலவசமாக சீரடி யாத்திரை சென்றோம். அதில் சரண்யாவைத் தவிர்த்து மற்ற அனைவரும் புறப்பட்டோம். அப்போது சரண்யா அவர்கள் குருவிடம் என்னை மட்டும் ஏன் விட்டுச் செல்கின்றீர்கள் அண்ணா என்று உரிமையுடன் கேட்க, அதற்கு குருஜி அவர்கள், சாயியின் அருளால் உனக்கு ஒரு குழந்தை பிறந்து அதற்கு ஒரு வயது பூர்த்தியாகும் போதுதான் உன்னை அழைத்துச் செல்வேன் என்று கூற அவளும் அமைதியானாள்.

சீரடி சென்று வந்ததும் குரு சென்னைக் குள் ஒரு நாள், சித்தர்களின் சீவசமாதி சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்தார். அது ஒரு சித்திரை மாதம். கடும் வெய்யிலில் பயணம் ஆரம்பம் ஆனது. கடைசி நேரத்தில் ஒரு பயணி வராமல் போனதால், எனக்கு உடனே சகோதரி சரண்யா ஞாபத்திற்கு வந்தார்.

உடனே அவரை தொடர்பு கொண்டு விபரத்தைச் கூற, அவரும் ஒப்புக் கொண்டு எங்களுடன் சீவசமாதி தரிசனத்திற்கு புறப்பட்டார். பல தலங்களை தரிசித்துவிட்டு ஞாயிறு கிராமம் என்ற சூரியன் தலத்திற்குச் சென்றோம். குருவும், ஒரு சிலரும் ஆலயத்தின் உள்ளே ஓர் ஓரமாக அமர்ந்திருக்கின்றோம்.

பக்தர்கள் ஆலயத்திற்குள் சென்று தரிசனம் செய்து விட்டு வெளியே வருகின்றார்கள். அப்போது குரு, அர்ச்சனைத் தட்டுடன் வந்த ஓர் அம்மாவை அருகே அழைத்து அவரிடம் இருந்த தட்டை வாங்கி அதிலிருந்த தேங்காயை எடுத்து உடைத்து அதை சரண் யாவிடம் கொடுத்து சாப்பிடுமாறு கொடுத்து கண்டிப்பாக உனக்கு குழந்தை வரம் உண்டு கவலைப்படாதே! என்று கூறினார்.

அடுத்த ஒரு வருடத்திற்குள் அவள் அழகிய பெண்குழந்தையை பெற்றெடுத்து நட்சத்திரா என்று பெயரிட்டார்கள். அடுத் தமுறை நாங்கள் சீரடி யாத்திரை செல்லும் போது குழந்தைக்கு சரியாக ஒரு வயது பூர்த்தியாகி இருந்தது.

அன்று தான் நாங்கள் சரண்யாவின் குடும்பத்துடன் 60 பேர் கொண்ட குழுவாக சீரடி செல்கின்றோம். அனைவரும் சாய் அப்பாவை பார்க்கப் போகின்ற ஆர்வத்தில் ஆனந்தமாக பயணப்பட்டோம்.இரண்டாம் நாள் அதிகால 4 மணி இருக்கும். இரயிலில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர்.

சரண்யா தன்னுடைய பெட்டியில் இருந்து ஓடி வந்து குருஜியிடம், அண்ணா ஒரு சந்தோசமான செய்தி, திருவண்ணாமலை மகாலட்சுமிக்கு குழந்தை பிறந்திருக்கின்றது. அதுவும் நீங்கள் கூறியது போல் இரட்டைக் குழந்தை. என்றாள் சந்தோசமாக.

– லீலைகள் தொடரும்

தொடர் –42

குருவைத் தேடி

உறவினர்களின் தொல்லையையும், திருமண பந்தத்தில் இருந்தும் ஒரே நேரத்தில் விலகிவிட எனக்கு தெரிந்த வழி அது ஒன்றுதான். ஆம், நான் அங்கிருந்தவாறே ரிஷிகேஷ் புறப்பட்டுவிடுவது என்று தீர்மானித்தேன்.

டெல்லி சென்று அங்கிருந்து ரிஷிகேஷ் செல்வது என்று திட்டமிட்டு, பயணத்திற்கு வேண்டிய பணம் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு நண்பரிடம் ஏற்பாடு செய்து விட்டு காத்திருந்தேன்.

இரண்டாம் நாள் வந்த நண்பர் நாளை கட்டாயம் தருவதாகக் கூறிவிட்டு சென்றார். நான் சற்று ஏமாற்றத்துடன் காத்திருந்தேன்.

மூன்றாம் நாள் இரவு பத்து மணி. நண்பர் வரவில்லை. பொருளாதாரத்தை நினைத்து மனம் வெறுத்துப் போனது. எப்படியாவது நண்பர் வந்து விடுவார் என்று வீட்டின் வாசலிலேயே உட்கார்ந்து இருக்கின்றேன். நான் தங்கியிருந்த வீடு சென்னையில் இருந்து இராமேஷ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருந்தது.

கனரக வாகனங்கள் ஓயாது சென்று கொண்டே இருக்கும். சாலை இரவு 11 மணிக்கு மேல் சற்று ஓய்ந்திருக்கும். நான் சாலைகளில் இரைச்சலாய் ஓடும் வாகனங்களை வெறித்துப் பார்த்தவாறே வாசலில் காத்திருந்தேன். மணி இரவு ஒன்றை நெருங்கிக் கொண்டிருந்தது.

இதற்கு மேல் நண்பர் வருவார் என்பதில் நம்பிக்கையில்லை. சரி உள்ளே சென்று உறங்கலாம் என்றவாறே எழுந்து கதவை சாத்தப் போகும் சமயம் வாசலில் 5 அடி உயரம் கொண்ட ஒரு பைரவர் வந்து நின்றது. அதன் உயரத்தைப் பார்த்ததும் நான் பயந்து கதவை வேகமாக மூட முயற்சிக்கையில் பைரவருக்கு பின்னால் வந்து நின்ற உருவத்தைப் பார்த்ததும் வெலவெலத்துப் போனேன்.



ஆறு அடிக்குமேல் உயரம். தலையில் கொண்டையாய் சுற்றியது போக மிச்சமுள்ள ஜடாமுடி இடுப்புவரை தொங்குகின்றது. அடர்ந்த புருவம். முறுக்கிய மீசை, ஜொலிக்கும் கண்கள். இடையில் ஒரு காசித் துண்டு வேறு ஆடை இல்லை. கழுத்தில் அடர்த்தியாக ருத்திராட்ச மாலைகள். ஒரு கையில் தண்டம், கமண்டலம். மறுகை பைரவரை பிணைத்திருந்த

சங்கிலியை பிடித்திருந்தது. கைகளும் கால்களும் உருண்டு திரண்டு அஜானுபாகுவாய் ஓர் உருவம் என் வீட்டு வாசலில் வந்து நிற்கின்றது.

கதவை சாத்தப் போனவன் அந்த உருவத்தை பார்த்து பிரமித்து நிற்கின்றேன். மனதினுள் இவர் யார் சிவனைப் போன்றே இருக்கின்றாரே என்றவாறே வியக்கின்றேன்.

அதேநேரம் அந்த மனிதன் என்னைப் பார்த்து, நான் சிவனில்லை. சாதாரண பித்தன். சிவப்பித்தன். என்றவாறே கைகளில் இருந்த கமண்டலத்தை என்னை நோக்கி நீட்டியவாறே இதில் தண்ணீரை நிரப்பு என்றார். நான் அதை வாங்கி தண்ணீர் நிரப்பி கொடுத்தேன்.

கமண்டலத்தை வாங்கிக் கொண்ட அந்த மனிதன், நமச்சிவாயம், நான் ரிஷிகேஷில் இருந்து நடைபயணமாக இராமேஷ்வரம் யாத்திரை செல்கின்றேன். நீ ரிஷிகேஷ் யாத்திரை செல்ல இது உகந்த நேரமல்ல. எனவே உனது திட்டத்தை தள்ளிப் போடு என்றவாறே விடுவிடுவென நடக்கத்தொடங்கினார்.

என்னால் அதற்குமேல் சும்மா இருக்க முடியவில்லை. கதவை பூட்டிவிட்டு அந்த மனிதனின் பின்னே நெடுஞ்சாலையில் ஓடுகின்றேன். அவர் அதற்குள் வெகுதூரம் சென்று விட்டார். வெகு வேகமாய் ஓடி அவரின் அருகே சென்றேன். அவர் நடந்து கொண்டிருக்க, நான் ஓடிக்கொண்டே அவரிடம் கேட்டேன். நீங்கள் யார்?

இப்பொழுதுதானே கூறினேன் நான் சிவப்பித்தன் என்றவர். என்னைப் பின் தொடராதே! அது உன்னால் முடியாது. உனக்கு எவ்வளவு சிரமம் ஏற்பட்டாலும் நான்கு வருடங்கள் நீ இந்த இடத்தைவிட்டு எங்கும் செல்ல முடியாது. சென்றால் அது உனக்கு ஆபத்தாய் முடியும். சொல்வதைக் கேள். திரும்பிச் செல். உனக்கு மறைசக்தியான நாங்கள் பாதுகாப்பாய் இருப்போம்.

என்னால் இங்கு இருக்க முடியவில்லை. நீங்கள் சொல்வதை நான் எப்படி நம்புவது? என்றேன் நான்

அதை நீயே தெரிந்து கொள்வாய் என்றவாறே அதி வேகமாய் நடக்க ஆரம்பித்தார். இப்போது நான் அவரின் பின்னே ஓடிக்கொண்டே இருக்கின்றேன். எனக்கு முன்னால் நடந்து கொண்டிருக்கும் அவரை என்னால் பிடிக்க முடியவில்லை. மெல்ல மெல்ல என் பார்வையில் இருந்து மறைந்து போகின்றார். நான் ஓடி,ஓடி களைத்துப் போகின்றேன். என்னால் முடியவில்லை. ஓரிடத்தில் நின்று சற்று கண்களை மூடியபடி நிதானிக்கின்றேன்.

சில விநாடிகளுக்கு பின் கண்களை திறக்கின்றேன். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. நான் என் வீட்டின் வாசலிலேயே நிற்கின்றேன். அப்படியானால் நான் அவ்வளவு தூரம் ஓடியது எல்லாம் மாயையா? அதை நீயே தெரிந்து கொள்வாய் என்று கூறினாரே அந்த மனிதன். அப்போது நடந்ததை நான் நம்பித்தான் ஆக வேண்டும். என்றவாறே குழம்பி, குழம்பி பின் தெளிந்த போது பின்னிரவும் கழிந்து விடிந்து விட்டிருந்தது.

விடிவதற்கும், நான் ரிஷிகேஷ் செல்லும் திட்டத்தை கைவிடவும் சரியாக இருந்தது. ஒருவாறாக மனதை தேற்றிக்கொண்டு எது வந்தாலும் இங்கேயே இருந்து விடுவது என்று தீர்மானித்தேன். உள்ளூர் நண்பர்களின் ஒத்துழைப்புடன் மக்களுக்கு யோகா, தியானம் கற்றுக் கொடுப்பது என்று முடிவெடுத்தேன். அதற்காக ஒரு



இடத்தை தேர்ந்தெடுத்து பயிற்சிகளை ஆரம்பித்தோம்.

ஒரு வாரம் ஆனது, ஊள்ளூரில் எனக்கு அறிமுகமாகி நன்றாக பழகிக் கொண்டிருந்த ஒரு ஊழியக்காரர், நான் தியானம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்ததும் எனக்கு எதிர் வினை யாற்ற ஆரம்பித்தார். என்னிடம் நட் போடு பழகிக்கொண்டே என்னை மட்டப்படுத்தி வந்தார். அதில் குறிப் பிட்ட ஒரு சம்பவத்தை மட்டும் பகிர்கின்றேன்.

அவர் நான் பிறந்த ஊரில் கடந்த பத்து ஆண்டுகளாக ஊழியம் செய்து மக்களின் அபிமானம் பெற்ற மதமாற்றுக்காரராய் வாழ்ந்து வந்தவர். மெல்ல, மெல்ல மக்களுக்கு சகல வித்திலும் உதவுவது போல் உதவி மக்களின் அறியாமையை பயன்படுத்தி, அவர்களின் மதத்தையும், மனத்தையும் மாற்றி, ஊருக்குள் மத ரீதியாக தன்னை எதிர்ப்பதற்கு வேறு ஆட்கள் இல்லாது தனிகாட்டு ராஜாவாக வளர்ந்து கொண்டிருந்தார்.

அப்படி அவர் வளர்ந்து வரும் சமயம் என்னைப்போன்ற ஆன்மீக சக்திகள் ஊருக்குள் வளர்ந்து விடாமல் இருக்க சமயோசிதமாக அவர்களை எதிர்க்காமல், அவர்களுடன் பழகுவதுபோல் நடித்து அவர்களை அடக்கி வைப்பதே அவரின் பாணி. ஒரு கட்டத்தில் மதம் மாறிய மக்களின் உதவியோடு ஊருக்கு வெளியே ஓரிடத்தில் இடம் வாங்கி திருச்சபை ஒன்றைக் கட்டத் தொடங்கினார்.

அவர் மிகுந்த அறிவாளி. இளம் வயதில் அவரை சுற்றி இருந்த உலகத்தாரால் அதிகம் ஏமாற்றத் திற்குட்பட்டவர். எனவே அவர் வாழ்க்கையை மிகுந்த எச்சரிக்கை உணர்வோடு அமைத்துக் கொண்டார். அதன்படி மக்களிடம் திருச்சபைக்கு வாங்கிய இடம் என்று ஒன்றைக் காட்டிவிட்டு அதில் ஒரு பகுதியை மட்டும் தான் சார்ந்திருந்த சபைக்கு கணக்கு காட்டிவிட்டு, மீதி இருந்த பகுதியில் பின்னாளில் தன் குடும்பத் திற்கான வீட்டை கட்டிக் கொண்டு இப்போது வசதியாக வாழ்ந்து வருகின்றார்.

அப்படி திருச்சபை கட்டத் தொடங்கிய சுமார் 23 வருடங்களுக்கு முன்பு ஓர் நாள். ஊழியக்காரர் என்னிடம் வந்து நான் இன்று வெளியூர் செல்கின்றேன். எனது சபையில் வேலை நடப்பதால் பாதுகாப்பிற்கு ஆள் யாரும் இல்லை பொருட்கள் எல்லாம் அப்படி அப்படியே கிடக்கின்றன. நீங்கள் வந்து இன்று ஒரு நாள் படுத்துக் கொள்ளுங்கள். நாளை நான் வந்துவிடுவேன் என்றார்.

நானும் அதை முழுமையாக நம்பி சரி, நான் படுத்துக் கொள்கின்றேன் என்று கூறிவிட்டு எனது வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு இரவு

பத்து மணிக்கு எனது மிதிவண்டியில் இரண்டு கிலோ மீட்டர் தூரம் தள்ளி இருந்த சபைக்குச் சென்றேன். சபை மலைக்குச் செல்லும் பகுதியில் அமைந்திருந்ததால் இன்னும் மின்சார வசதி இல்லை. கும்மிருட்டு மெதுவாக சைக்கிளை மிதித்துக் கொண்டு சபைக்கு வந்து சேர்ந்தேன்.

அறைகுறையாய் கட்டப்பட்ட சபை இருட்டில் பாழடைந்த பங்களா போல் காட்சியளிக்கின்றது. அதற்கு அருகிலேயே கட்டுமான பொருட்களை வைப்பதற்காக சிறிய கீற்று கொட்டகை. அது ஒரு சனவரி மாதம் பின் பனிக்காலம். மலையடிவாரம் வேறு. குளிர் காற்று சத்தத்துடன் உடலை ஊசி போன்று குத்துகின்றது. அந்த சபையைச் சுற்றி வேறு எந்த கட்டடமும் இல்லை. மனிதர்களும் இல்லை.

கேட்டை திறந்து உள்ளே சென்று சபையின் முன் தாழ்வாரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு, அங்கே கிடந்த ஒரு கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டேன். சுற்றிலும் ஏதோ அமானுஷ்யங்கள் நிகழ்வதற்குண்டான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டிருப்பதை நான் என் உள்ளுணர்வால் உணர்ந்தேன். என்னை சுற்றி என்ன நடக்கப் போகின்றது என்பதை கூர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தேன்.

நேரம் செல்லச் செல்ல எனக்கு தூக்கம் கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தது. சற்றே கட்டிலில் சாய்ந்து கொண்டேன். என்னயறியாமல் ஆழ்ந்த தூக்கத்திற்குச் சென்றுவிட்டேன். திடீரென்று நான் பூமியில் இருந்து பறப்பது போல் உணர்ந்தேன். தூக்கம் கலைந்து சட்டென்று கண்களை திறக்கின்றேன். நான் கட்டிலில் இருந்து ஒரு அடி உயரத்தில் அந்தரத்தில் மிதந்து கொண்டிருக்கின்றேன். அதேநேரம் யாரோ சபையின் பின்புறம் ஓடுவதுபோல் சத்தம் கேட்கின்றது.

குருநாதா என்று சத்தமாக கத்தினேன். மிதந்து கொண்டிருந்த என் உடல் பொத்தென்று கட்டிலில் விழுந்தது. சட்டென்று குதித்து எழுந்து சபையின் பின்புறம் ஓடினேன். யாரும் இல்லை. திடீரெனறு முன் பகுதியில் ஏதோ பொருள் பெரும் சத்தத்துடன் கீழே விழுகின்றது. படபடவென்று முன்னே ஓடினால் அங்கே எனது மிதிவண்டியை காணோம். சுற்றும் முற்றும் பார்க்கின்றேன். சற்று தூரத்தில் கேட்டிற்கருகே எனது மிதிவண்டி கீழே கிடக்கின்றது.

அருகே சென்று மிதி வண்டியை நிமிர்த்தி பூட்டை திறந்து தயாராய் வைத்தேன். அங்கிருந்து உடனடியாக சென்றுவிடு என்று என் உள் உணர்வு உணர்த்தியது. நான் அதை பொருட்படுத்தாமல் சற்று நேரம் அங்கேயே நின்று கவனித்தேன். பத்து நிமிடம் ஆயிற்று. வேறு எந்த சம்பவங்களும் நடக்கவில்லை. மிதி வண்டியை அங்கேயே விட்டுவிட்டு மீண்டும் தாழ்வாரத்திற்கு வந்து



கூட்டிலில் அமராமல் தரையில் அமர்ந்து கொண்டு விழிப்போடு சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

பத்து நிமிடம் சென்றிருக்கும். சில் வண்டுகளின் ரீங்காரம் காதை கிழித்தது. எங்கோ நரி ஊழையிடும் சத்தம் சன்னமாக கேட்டது. இடை யிடையே யாரோ முனகுவது கேட்டது. காதை கூர்மையாக்கிக் கொண்டு கேட்கின்றேன். ஆமாம் யாரோ வேதனையில் முனகுவது போன்ற சத்தம் வரவர அதிகமாகிக் கொண்டே போகின்றது.

சத்தம் எங்கிருந்து வருகின்றது என்று கவனித்தேன் அது அருகே உள்ள கீற்று கொட்டகையில் இருந்து வருவது தெரிந்தது. மனம் முழுவதும் குருவே துணை, குருவே துணை என்று உச்சரித்தவாறே, மெதுவாய் கீற்று கொட்டகைக்கு அருகில் வந்து பார்க்கின்றேன். கொட்டகையில் கதவிற்கு பதில் ஓர் திரைசீலை தொங்கிக்கொண்டிருந்தது.

மெதுவாய் திரைசீலையை விலக்கிப் பார்க்கின்றேன். உள்ளே தட்டு முட்டு சாமான்களுடன் ஒரு ஓரமாய் உடல் முழுக்க வெள்ளை துணியால் சுற்றப்பட்டு யாரோ படுத்திருந்தார்கள். நான் உள்ளே நுழைந்து அண்ணா, அண்ணா என்று அழைத்தேன். சத்தமில்லை. அருகே சென்று முகத்திரையை விலக்க, அங்கே இறந்த மனிதனுடைய பிணம் ஒன்று துணியால் மூடி வைக்கப்பட்டிருந்தது. இப்போது முனகல் சத்தம் வெளியே கேட்க ஆரம்பித்தது.

நான் உடனடியாக, பிணத்தினுடைய முகத்திரையை மூடிவிட்டு வெளியே ஓடி வந்தேன். இனி இங்கு இருக்க கூடாது. என்னை சுற்றி ஏதோ அமா னுஷ்யங்கள் ஏவப்பட்டிக்கின்றது என்பதைப் புரிந்து கொண்டேன். திடீரென சபைக்குள்ளிருந்து மங்கலான விளக்கொளி வருகின்றது. தொடர்ந்து பலபேர்களின் அழுகுரலும், செபிக்கின்ற குரலும் மாறி மாறி கேட்கின்றன.

நான் கேட்டை நோக்கி போய்விட வேண்டும் என்று நினைக்கின்றேன். என்னால் கால்களை முன்னால் நகர்த்த முடியவில்லை. என்னை யாரோ பின்னால் இருந்து இழுக்கின்றார்கள். காற்று பலமாக வீசி மண் பறந்து என் கண்களில் விழுகின்றது. நான் என் கண்களை கசக்கிவிட்டு எதிரே பார்த்தால் கொட்டைகைக்குள் இருந்த பிணம் என் எதிரில் நிற்கின்றது. அது தன் கையை நீட்டிக்கொண்டு என்னை நோக்கி முன்னேறுகின்றது.

என் உடல் செயலற்றுப் போய் விட்டது. என்னை யாரோ அசையாமல் பிடித்துக் கொண்டிருப்பது போல் இருக்கின்றது. சத்தம் போடலாம் என்றால் குரலும் வரவில்லை. மிகவும் சிரமப்பட்டு, குருநாதா. என்று முடிந்தவரை பலமாக கத்துகின்றேன். என் சக்தியை எல்லாம் ஒன்றாகத் திரட்டி கேட்டின் அருகே நிற்கும் என் மிதி வண்டியை நோக்கி ஓடுகின்றேன்.

அதே நேரம் கிரீச் என்ற சத்தத் துடன் கேட் வேகமாக திறந்து கொண்டு என் மிதி வண்டியின் மீது மோத மிதிவண்டி தூரப் போய் விழ, கேட்டின் வெளியே கருப்பான ஓர் உருவம் சுருட்டு புகைத்தபடி என்னை நோக்கி வந்தது. அந்த உருவத்தின் வாயில் இருந்து குபுகுபுவென்று வெளியேறிய புகை காற்றில் கலந்து சற்று தூரத்தில் இருந்த என் நாசிக்காற்றில் நுழைந்தது. அது கஞ்சா வாடை என்பதை நான் உணர்ந்த நேரம் சட்டென்று மயங்கி சரிந்தேன்.

- (தொடரும்)

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தொடர் –6

சாய் சரவணன்

"அதி தேவதை"

சுந்தராபாயின் அற்புத நடனத்தால் பண்டரியில் விட்டலின் ஊர்வலம் அவனது சங்கல்பத்தால் நடந்தது பற்றி அறிந்தோம். மனிதப் பிறவியின் லட்சியமாக பகவானை அடையும் மார்க்கத்தில், ஸ்ரீ நாமத்தேவர், ஸ்ரீ துக்காராம், ஞானாநந்தகிரி சுவாமிகள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ ஏக்நாதர், ஸ்ரீ திருகச்சி நம்பிகள் இவர்கள் யாவரும் தன் அதீத தெய்வபக்தியால், பகவானை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள்.

ஆனாலும் பகவான் இவர்கள் யாவரையும் தன்னை உணரும் ஆத்ம ஞானத்தை அடைந்திட ஓர் சத்குருவை பற்றிக்கொண்டு, அவருக்கு சேவை செய்து, அவரையே சதா நினைக்க வைத்து, தன்னை உணர்ந்து, பகவானின் திருவடியோடு இரண்டறக் கலந்திடச் செய்தான். இன்றும் அவர்கள் வாழ்ந்து கொண்டு, பகவானை அடையும் மார்க்கம் சத்குருவின் பாதத்தை பற்றுவது மட்டுமே! என்று வழிகாட்டி அருள் புரிகின்றார்கள்.



இவர்களைப் போலவே பகவான், சுந்தராபாயிக்கும் தன்னை உணரும் மார்க் கத்தை நோக்கி பயணிக்க அருளினான். இப்பூமியில் அவதரித்த எந்த ஒரு சீவனும் முக்தியை அடைய வேண்டுமானால் அது குருவருளால் மட்டுமே இயலும்! ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ சாயி நாதர், மூவரும் அவதார புருசர்கள். என்றாலும் அவர்களும் ஒரு குருவை நாடி அவர்களுக்கு சேவை செய்து அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

சுந்தராபாய் விட்டலன் மீது

கொண்ட பிரேம பக்தி அவளை மிக உயரிய நிலைக்கு இட்டுச்சென்றது நாமத்தேவரை ஞானத் தேவர்,சஞ்சார யாத்திரைக்கு அழைத்தார். ஆனால் நாமத்தேவர், விட்டலனையும், பண்டரியையும் விட்டுப் பிரியமாட்டேன் என வம்பு செய்தார். கடைசியில் விட்டலன் சமாதானம் செய்து ஞானத்தேவரோடு, நாமத் தேவரை, யாத்திரைக்கு வழியனுப்பி வைத்தார்.

நாமத்தேவரைப் போலவே, சுந்தராபாயும், விட்டலனை விட்டு எங்கும் செல்ல மாட்டாள். சத்குருவை தரிசனம் செய்து அவருக்கே தன் வாழ்வை சமர்ப்பணம் செய்யும் உன்னதமான ஆத்மஞானம் அடையும் நிலையை நோக்கி, சுந்தராபாயை வழிநடத்த விட்டலன் ஒரு லீலை செய்தான்.

தன்னிடம் அவளை இழுக்க லீலை புரிந்து அவள் வாழ்வில் பக்குவம், வைராக்கியம்,பிரேம பக்தி மூன்றையும் தந்து தன் திவ்ய தரிசனத்தையும் தந்தான் விட்டலன். அடுத்த நிலைக்கு அவளை இட்டுச் செல்வதற்காக சுந்தராபாயிக்கு பண்டரியை விட்டுச் செல்ல நெருக்கடியைத் தந்தான்.

சுந்தராபாயி தனது 20 வது வயதில் எதன் மேலும் பற்றில்லாமல், தன் ஆத்ம சகாவான விட்டலனின் மீது பூர்ணமாக பற்றை வைத்திருந்தாள். ஆண்டாள் எப்படி தன்னையே ஸ்ரீ ரங்கநாதனுக்கு ஆத்ம நிவேதனம் செய்தாளோ, அதைப் போலவே சுந்தராபாயும் ஸ்ரீ விட்டலநாதனிடம் ஆத்ம நிவேதனம் செய்து கொண்டாள்.

பண்டரிபுரத்தில் சில பேர், பக்திக்கு சமர்ப்பணமான இவளுக்கு வயதோ சிறியது. ஏன் இவள் மீண்டும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது எனப் பேசிக் கொண்டனர். இந்த செய்தி பிக்குபாயின் மூலம் சுந்தராபாயிடம் வந்து சேர்ந்தது. இதற்கிடையே ஓர் வயதான் தம்பதி அவர்களின் மகனுக்கு சுந்தராபாயை பெண் கேட்டு வீட்டுக்கே வந்து விட்டனர்.

பெண் கேட்டு வந்தவர்களிடம் சுந்தராபாயி தன் நிதானத்தை இழக்காமல் அமைதியாக கூறினாள். உங்களை என் பெற்றோராக மதித்துக் கூறுகின்றேன். எனக்கு திருமண வாழ்க்கையில் துளியும் இச்சை இல்லை. என் இச்சை ஒன்றே! அது விட்டலன் ஒருவனே, நான் அவனுக்காகவே பிறந்தவள். எனவே என்னை தொந்தரவு செய்ய வேண்டாம் என உறுதியாகக் கூறினாள்.

அவளது பக்தியை மெச்சிய தம்பதியினர், விபரம் தெரியாமல் உன்னை தொந்தரவு செய்து விட்டோம். எங்களை மன்னித்துக் கொள்ளம்மா, நீ நினைத்தது நிச்சயம் நடக்கும் என்று வாழ்த்திச் சென்றனர். இவ்வாறே மேலும் பலர் அவளை திருமணம் செய்து கொள்ளுமாறு தொந்தரவு செய்தனர்.

சுந்தராபாயோ, சதா தன் வீட்டிலேயே, மீராவைப் போல விட்டலனிடம் பிரேம பக்தி கொண்டு ஆராதித்து வந்தாள். தன்னை திருமணத்திற்கு வற்புறுத்தும் உலகத்தாரின் செயலை நினைந்து வருந்தி இறைவனிடம் இவ்வாறு முறையிட்டாள்.



பரமாத்மா, பாண்டுரங்கா! உன்னையே கதி என்று நம்பி வந்த மீராவிற்கும், ஜனாபாயிக்கும், கானோபாத்ராவிற்கும் ஸ்ரீ ரமா பாயிக்கும், என எண்ணற்ற பக்தைகளுக்கு வழிகாட்டி உன் திருவடியில் இடம் தந்த ஸ்ரீ விட்டலா! கோவிலின் உள்ளே வந்து உன்னை என்னால் தரிசிக்க இயலாது. எப்போதும் உன்னை வீட்டிலேயே ஆராதிக்கின்றேன்.

ஆனால் இப்போது என்னால் வீட்டிலேயும் இருக்க முடியவில்லை. பக்தவச்சலா காத்து ரட்சிப்பாய், என் உலகம் நீ, உன் இதயம் உனக்காக, வேறு எவருக்கும் இடமில்லை. என்று கூறி அழுது புலம்பினாள் சுந்தராபாய்.

அப்போது ஓர் அசரீரி கேட்டது, " சுந்தராபாய், எனக்கு பிரியமானவள் நீ, நான் உனக்கு தந்த வாக்கை நினைவில் கொள் எனக்கூறியது". சுந்தராபாயின் நினைவுகளில் "நானே உன் சத்குருவாய் வருவேன்" என பகவானின் வாக்கு திரும்பத் திரும்ப எதிரொலித்தது.

சுந்தராபாயிக்கு பாண்டுரங்க பக்தர்களின் வரலாறும், பாடல்களும் நன்கு தெரியும். நாமத்தேவர், ஏகநாதர் போன்றோர் எப்படி தம் சத்குருவை அடைந்தார்கள் என் அவர்களின் கதைகள் மூலம் நன்கறிவாள். அதன்மூலம் அவள் ஓர் செய்தியைப் பெற்றாள்.

அதாவது, பகவானின் தரிசனம் ஒருவனுக்கு கிட்டினாலும், அந்த பகவானோடு இரண்டறக் கலக்க சத்குருவின் கருணை அவசியம் வேண்டும் என்பதையும், அதற்கு சத்குருவின் திருவடிகளில் சரணடைந்து அவருக்கு சேவை புரிந்து வாழ்வை அர்பணிக்க வேண்டும் என்பதையும்,சத்குருவும் பகவானும் வேறல்ல என்பதனையும் உணர்ந்து கொண்டாள்.

எனவே தனக்கான குருவைத் தேட வேண்டும் என்ற தீராத ஆவல் ஏற்பட்டு, தம் குருவை தேடி தேச யாத்திரைக்குச் செல்வது என உறுதி பூண்டாள்.

உண்மையில் பகவானையும், சத்குருவையும் தேடுபவர்களின் அநேக அனுபவங்களையும், லட்சியம் ஈடேறிய பக்தர்களின் கதைகளையும் நாம் கேட்டிருப்போம். குறிப்பாக, பூஜ்ய ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜீ, ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளையும் குறிப்பிடலாம்.

அப்படிப்பட்ட புண்ய யாத்திரைக்கு புறப்படும் தருணம் வந்துவிட்டது என உணர்ந்த சுந்தராபாய், தன் தோழியான பிக்குபாயை அழைத்து, தான் தேச யாத்திரை செல்வதைப் பற்றி கூறினாள். பிக்குபாயோ, அதிர்ச்சியாகி, நீ ஒருத்தி தான் எனக்கு துணையாக இருக்கின்றாய். நீயும் என்னை விட்டுப் போனால் நான் என்ன செய்வேன். வேண்டாம், போகாதே எனப் புலம்பித் தவித்தாள்.

சுந்தராபாயி,பிக்குபாயை சமாதானப்ப டுத்தினாள். என் எதிர் கால நோக்கம் என் பிறவிப் பயனை அடைவது மட்டுமே! அதற்காகவே நான் பிறவி எடுத்திருக்கின்றேன். இந்த புண்ணிய பிறவிப் பயனை தந்த பகவானோடு என்னைச் சேர்த்து வைக்கும் சத்குருநாதனையே நான் தேடிச் செல்கின்றேன். என்னுடன் இவ்வளவு காலம் ஒன்றாக இருந்துமா என் லட்சியத்தை நீ புரிந்து கொள்ளவில்லை.

எனது இலக்கை அடைய என் தோழியாகிய நீயே தடையாக இருக்கலாமா? நான் யாத்திரை செல்ல வேண்டும் என்பது விட்டலின் சங்கல்பம். அதை என்னால் மீற முடியாது. எண்ணற்ற மகான்கள் யாத்திரை சென்று உள்ளனர். அவர்கள் பெற்ற ஆன்மீக அனுபவங்களை நானும் பெற ஆவலாய் உள்ளேன். என்னை கரை சேர்க்க விட்டலனே குருவாய் வருவேன் என எனக்கு வாக்கு தந்துள்ளான். அவன் வாக்கு பொய்காது.

ஆகையால் இன்று ஏகாதசி புண்ணியதினம். இன்றே நான் யாத்திரைக்குப் புறப்பட இருக்கின்றேன் என சுந்தராபாயி கூறும் போதே பிக்குபாயின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. என் பிரபு, என்பதி, என் விட்டலன் வாழும் பண்டரியை விட்டு செல்வது கஷ்டமாக இருப்பினும், என் ஆத்மாவை கரை சேர்ப்பதற்கே புறப்படுகின்றேன்.

சுந்தராபாய் முடிவெடுத்துவிட்டாள். இனி எவர் கூறினாலும் நிற்க மாட்டாள். தோளில் ஒரு ஜோல்னா பையை மாட்டிக்கொண்டு, ராதா கிருஷ்ண விக்கிரகத்தை தன் மார்போடு அணைத்துக்கொண்டு, தன் தோழியோடு சந்திரபாகாவிற்கு வந்தாள். புண்டரீக பக்தனுக்கு ஓர் வணக்கத்தை செலுத்திவிட்டு பகவானைப் பற்றிய மனோபாவத்தோடு தன் ஆன்மீக தேடுதலுக்கான பயணத்தை துவங்கினாள், சுந்தராபாய் வீர்ஸாகர்.

- (தொடரும்)

கோனேரிராஜபுரம்

அழகிய நடராஜர்

புண்ணியம் செய்தவர் மட்டுமே உலகிலேயே அழகு ததும்பி வழியும் இந்த நடராஜரை தரிசித்து மகிழும் பாக்கியம் பெற முடியும்.

சிற்பி, ஆறாவது முறையாக நடராஜப் பெருமாள் திருவுருவத்திற்கு அச்சு செய்து பஞ்ச உலோகங்களை தனியே காய்ச்சி வார்த்துக் கொண்டிருந்தான்.

பெரிய திருவாச்சியை தனியே வார்த்தாகி விட்டது.சிவனுக்குரிய சடையை, அந்த சடையில் இருக்கும் நாகத்தை கங்கை உருவத்தை வார்த்தாகிவிட்டது. சிவகாமிக்கும், நடராஜருக்கும் தனித்தனியே பீடம் செய்து முடித்தாகி விட்டது. இப்போது நடராஜரையும், சிவகாமியையும் வார்க்க வேண்டும்.

மழு தொலைவில் கொதித்துக் கொண்டிருக்கிறது. அவன் அடுப்பைத் துருத்தியால் வேகமாக ஊதி உலையின் தீவிரத்தை அதிகப்படுத்தி மழுவைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தான். மழு தயார் நிலையில் இருந்தது.

படுக்க வைக்கப்பட்ட பெரிய களிமண் அச்சுக்கு முன் கைகூப்பி நின்றான்.

இது ஆறாவது முறை. என்ன தவறு செய்தேன் என்று தெரியவில்லை. ஒவ்வொரு முறையும் ஏதேனும் ஒரு பின்னம் நடந்து கொண்டிருக்கிறது.

உன்னை நான் உருவமாகச் செய்கிறேன் என்ற கர்வம் எனக்கில்லை. இருப்பினும் ஏன் இந்த சோதனை.ஈசனே, நீயே வந்து குடி கொண்டாலொழிய உன் உருவத்தை ஒரு நாளும் என்னால் செய்ய முடியாது. என்னையறியாது ஏதேனும் கர்வம் எனக்கிருப்பின் தயவுசெய்து என்னை தண்டித்துவிடு. இந்த முறையாவது உன்னருளை எனக்கு காட்டு என்று வேண்டினான்.



திடீரென அரசனுடைய குரல் அவன் காதில் விழுந்தது. "வேண்டுமென்றே தவறு செய்கிறாய் சிற்பியே, என்னிடம் பொருள் ஈட்டவே நீயாக ஏதேனும் தவறு செய்துவிட்டு, பின்னமாகிவிட்டது, குறையாகிவிட்டது, என்று காரணம் கூறுகின்றாயா? நான்கு வருடங்களாக நடராஜர் சிலையை செய்வதாக கூறி சாக்கு போக்கு கூறுகின்றாய்! இதுவே கடைசி முறை இன்னும் இரண்டு நாட்களில் நடராஜர் சிலையை செய்யவில்லையெனில், உன் கதையை என் வாளால் முடிப்பேன் என்று சீறினான் அரசன்.

அந்த அரசன் நான்கு வருடங்கள் பொறுமையாக இருந்ததே பெரிய விஷயம். அவன் பொறுமை மீறும்படியாக என்ன ஏற்பட்டது என்று தெரியவில்லை, அரசனிடம் இருந்து நடராஜர் சிலை செய்ய உத்தரவு சிற்பிக்கு வந்ததுமே அற்புதமான ஒரு நடராஜர் சிலையை காலகாலத்திற்கு நிற்கும்படி செய்ய வேண்டும் என்ற வேகம் வந்தது. அந்த வேகத்தோடு கர்வம் வந்ததோ, என்னவோ தெரிய வில்லை. ஐந்து சிலைகள் செய்தும் சரியாக வரவில்லை.

இது ஆறாவது சிலை.

ஒரு சிறு தவறும் நேராதவாறு எல்லா விஷயங்களையும் ஒரு முறைக்கு இரு முறை சோதித்து மெழுகால் சிலை செய்து பிறகு அதன் மீது களிமண் பூசி, சரியான இடத்தில் ஓட்டைகள் வைத்து காற்றுப் போக வழிகள் செய்து அவன் மழுவைக் காய்ச்சிவிட்டு இறைவனை வழிபடத் தொடங்கினான்.

மழு உச்ச நிலையில் கொதித்துக் கொண்டிருக்க, "என்னுடைய வாழ்க்கை உயர்வதும், தாழ்வதும் இப்பொழுது உன்கையில் இருக்கிறது. உனக்கு விருப்பம் இருப்பின் இதற்குள் வந்து உட்கார்ந்து கொள் இல்லையெனில் என்னை சாக விடுஞ்! என்று சொல்லி விட்டு முழுமனதோடு மழுவை கிளரினான். உலையின் அனல் உடம்பு முழுவதும் அடித்தது.

இருட்டில் யாரோ தன்னை நோக்கி வருவது போல் தெரிந்ததும் நிமிர்ந்து பார்த்தான்.வந்தவர்கள் வயதான அந்தணத் தம்பதிகள்.அப்பா திருநல்லம் என்கிற ஊர் இதுதானே! இந்த ஊரைதேடிக் கண்டுபிடித்து வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

ஐயா, சிற்பியே, தயவுசெய்து குடிப்பதற்கு ஒரு குவளை நீர் கொடு" என்று கேட்டார். சிற்பி திரும்பி ஆச்சரியத்தோடு அந்தணர்களைப் பார்த்தான், என்ன இந்த அந்தணர் தன்னிடம் போய் நீர் கேட்கிறாரே, என்று ஆச்சரியப்பட்டான்.

அய்யா, நான் சிற்பி, கருமார் இனத்தை சேர்ந்தவன்.அந்தணர்கள் வசிக்கும் பகுதி கோயிலுக்கு பின்புறம் இருக்கிறது. நீங்கள் பார்ப்பதற்கு அந்தணர்கள் போல் இருக்கிறீர்கள். எனவே, கோயிலுக்கு பின்புறம் போய் அந்தணர் வீட்டில் குடிக்க நீர் கேளுங்கள், தருவார்கள் "என்று கூறிவிட்டு மறுபடியும் வேலையில் மூழ்கினான்.

வந்தவர் கைதட்டி அழைத்து "எனக்கு தாகமாக இருக்கிறது ஐயா, அந்தணர் வீட்டை கண்டுபிடித்து போகிறவரையில் என்னால் தாங்க இயலாது சுருண்டு விடுவேன் என்று தோன்றுகிறது. எனவே உன் கையால் ஒரு குவளை நீர் கொடு "என்றான்.



நான் இங்கு வேலை செய்து கொண்டிருப்பது உன் கண்ணில் படவில்லையா, ஒரு சிலை வடிப்பது எவ்வளவு கடினம் என்பது உங்களுக்கு தெரியாதா, நானே சிலை சரியாக வரவேண்டுமே என்ற கவலையில் இருக்கின்றேன் என்னிடம் வந்து குடிக்க தண்ணீர் கொடு என்று ஏன் என் உயிரை வாங்குகிறீர்கள்.

என்னிடம் தண்ணீர் இல்லை, இந்த மழு தான் இருக்கிறது வேண்டுமானல் இதை குடியுங்கள்" என்று கோபத்தோடு கூற, "சரி அதையே குடித்துக் கொள்கிறேன்" என்று அருகே வந்த கிழவர், அருகில் இருந்த சொம்பை எடுத்து கொதித்துக் கொண்டிருந்த மழுவை மொண்டார், கொதிக்கின்ற நெருப்பு ஒளியோடு வீசுகின்ற மழுவை எடுத்து உயர்த்திக் குடித்தார். மழு வாய்க்குள் போயிற்று, மழுவை அவர் குடித்துக் கொண்டிருக்கும் போது சற்றுத் தொலைவில் நின்றிருந்த அவரது மனைவி வாய்விட்டுச் சிரித்தாள்.

சுற்றியுள்ள உதவியாட்களும், சிற்பியும் பயந்து போய் ஓவென்று கூவ, வந்த வரையும் காணோம், வந்தவர் மனைவியும் காணோம்.

ஐயா, கொதி நிலைக்கு வந்துவிட்டது என்று உதவியாளர் கூவ, எல்லாரும் கொதிக்கும் பாத்திரத்தின் அடிப்பக்க குழாயைத் திறந்து விட்டார்கள். மழு தரைவழிந்து பள்ளத்தின் வழியே சிற்பத்திற்குள் நதிபோல் ஓடி புகுந்து கொண்டது. சரியாய் எண்பது நொடிகளில் எல்லா உருக்கு உலோகமும் சிலைக்குள் போய் தங்கிவிட்டது. சிலை செய்யும் அவசரத்தில் கிழவரையும், கிழவியையும் யாரும் தேடவில்லை.

உருக்கு மொத்தமும் வழிந்ததும் அவரவர் ஓரம் போய் திண்ணைகளில் சாய்ந்தார்கள். தலைக்கு துணி வைத்துக் கொண்டு மயக்கத்தில் ஆழ்ந்தவர்கள் போல் தூங்கினார்கள், விடிந்ததும் களிமண்ணில் நீர் ஊற்றி மெல்ல மெல்ல பிரித்து சிலையைப் பார்த்தார்கள். சிலை ஆறடி உயரத்திற்கு மேலாய் அற்புதமாய் வந்திருந்தது.

குமிழ் சிரிப்பும், கோவைச் செவ்வாயும், அகலமான கண்களும், தீர்க்கமான நாசியும் அற்புதமான கோணத்தில் நடனமாடும் சிவனுருவம் மிகச் சிறப்பாக வந்திருந்தது.நிமிர்த்தி பீடத்தில் நிற்க வைத்தார்கள், சடையையும், திருவாச்சியையும் மாட்டினார்கள்.

ஊர்கூடிப் பார்த்து வியந்தது, கன்னத்தில் போட்டு கொண்டது. மன்னனுக்கு ஓடிப்போய் மந்திரிகள் செய்தி சொல்ல, மன்னனும் விரைந்து வந்து பார்த்தான்.

"உங்களுக்கெல்லாம் சுத்தி எடுத்தால் தானடா காரியம் செய்ய முடிகிறது. தலையை கொய்து விடுவேன் என்று நான் ஆணையிட்டதனால் தானே இரண்டு நாளில் இத்தனை அற்புதமான ஒரு சிற்பத்தை செய்து முடித்தாய், இதுவரை நீ ஏமாற்றிக் கொண்டிருந்தது உண்மை என்று இப்போது தெள்ளத் தெளிவாக புரிந்து விட்டது பார்" என்று சிரிப்போடும் கடுப்போடும் மன்னன் பேசினான்.

சிற்பி இல்லை என்று தலையாட்டினார், "என்ன சொல்ல வருகிறாய்?" மன்னன் மறுபடியும் சீறினான்.

"இது சிவனால் செய்யப்பட்ட சிலை, அந்தணர் உருவத்தில் சிவனே வந்து நின்றார். தண்ணீர் கேட்டார் மறுத்தேன், இது தான் இருக்கிறது என்று மழுவை காண்பித்தேன், மழுவை ஏந்திக் குடித்தார் மறைந்தார்," என்று நடந்ததைச் சொல்ல

"இந்த கதையெல்லாம் என்னிடம் விடாதே" என்று மறுபடியும் சீறினான்.

"இல்லை அரசே .இது சிவன் இருக்கிற சிலை, சிவன் மழுவுக்குள் கரைந்த சிலை. எனவே இதனுள் இறைவன் இருக்கிறான். இது என்னால் செய்யப்பட்ட சிலை அல்ல," என்று பணிவாக சொல்ல, அரசன் கெக்கலித்து கிண்டலாகச் சிரித்தான்.

உளியை சிற்பியிடமிருந்து பிடுங்கி, இது சிவன் இருக்கிற உருவம் என்றால் இதை குத்தினால் ரத்தம் வருமா என்று காலில் ஒரு காயத்தை ஏற்படுத்தினான். பளிச்சென்று குருதி கொப்பளித்து கொட்டி தரையை நனைத்தது.

மக்கள் பயந்தார்கள், அரசன் திகைத்துப் போனான். பயத்தில் சுருண்டு விழுந்தான்.இறைவனை சோதித்த அரசனின் உடம்பு முழுவதும் தொழுநோய் பரவியது. அவன் சிற்பியிடமும், இறைவனிடமும் கைகூப்பி மன்றாடி மன்னிப்புக் கேட்டான் என்று போகிறது கோனேரி ராஜபுரத்தின் கதை.

எங்கே இருக்கிறது இந்த கோனேரிராஜபுரம், கும்பகோணம் காரைக்கால் பேரூந்து பாதையில் புதூர் என்ற ஊரை அடைந்து, அங்கேயிருந்து வலதுபுறமாக போகும் சாலையில் விசாரித்துக் கொண்டு போக வேண்டும்.

வயல் வெளிகளுக்கு நடுவே ஒரு பெரிய கிராமம் அமைதியாக உட்கார்ந்திருக்கிறது. கோனேரி ராஜபுரத்திற்கு முற்காலப் பெயர் திருநல்லம். இந்த கோனேரி ராஜபுரத்திற்கு சோழமன்னன் கண்டராதித்தனும் அவன் மனைவி செம்பியன் மாதேவியும் பல நிவந்தங்கள் விட்டிருக்கிறார்கள்.

மிகச் செழிப்பான ஊர். நடராஜர் விக்ரகத்தை பார்க்க வேண்டுமானால் அதை கோனேரி ராஜபுரத்தில் தான் பார்க்க வேண்டும். உலகத்திலேயே



மிகப் பெரிய நடராஜர் சிலை இந்த ஊரில் தான் இருக்கிறது. அழகு என்றால் அழகு அப்படியொரு கொள்ளையழகு. சிற்ப கலை தெரிந்தவர்கள் மட்டுமல்ல, சிற்பக் கலைப்பற்றி தெரியாதவர்கள் கூட அருகே போய் நின்றார்கள் என்றால் அப்படியே பரவசமாகிவிடுவார்கள்.

கைரேகை, அக்குள் பக்க கருப்பு, அங்கு வழக்கமாய் எல்லா ஆண் களுக்கும் இருக்கின்ற கொழுப்புக் கட்டி, புறங்கை தேமல் என்று பல்வேறு விஷயங்கள் அற் புதமாக அந்த சிற்பி செய்திருக்கிறான்.

அரசன் உளியால் செதுக்கிய இடமும் பாதத்திற்கு மேல் அப்படியே இருக்கிறது. கோயில் ஆயிரம் வருடத்து கோயில். கோனேரி ராஜபுரம் சுவாமியின் பெயர் உமாமகேஸ்வரர்.

இறைவி பெயர் தேகசௌந்தரி, ஸ்தலமரம் அரசு, தீர்த்தம் பிரம்ம தீர்த்தம். கும்பகோணம் போகிறவர்கள் அரை நாள் கோனேரிராஜபுரத்திற்கு ஒதுக்கி வைத்துவிடவேண்டும். நிதா னமாக பார்த்துவிட்டு வரவேண்டும்.

குறிப்பாக அந்த வைத்தியநாத சன்னதி மண்டபத்தில் உட்கார்ந்து ஜபம் செய்துவிட்டு அல்லது கண்மூடி இறைவன் பெயரைச் சொல்லிவிட்டு வருதல் மிக அவசியம்.

எல்லாவற்றையும் விட உங்கள் வாழ்நாளில் ஒரு முறையேனும் இந்த நடராஜனை பார்த்து கைகூப்பிவிட்டு வாருங்கள்! திருநல்லம் ஒரு முறையேனும் சென்று வாருங்கள். சிவ அழகில் சொக்கிப் போய் வருவது கண்கூடான உண்மை.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

"அதி தேவதை" யின்
105 ஆம் ஆண்டு சமாதி திருநாள்

பகவான் பாபா உடலுடன் வாழ்ந்த காலத்தில் அவரை அனன்ய பக்தியுடன் நேசித்த பல பக்தர்கள் இருந்திருக்கின்றார்கள். அத்தகைய பக்தர்களின் வரிசையில் மேன்மையான இடம் பெற்றுள்ள ஒரு பக்தையே ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி.


அன்னை சீரடியில் வாசம் செய்த 8 ஆண்டுகள் பாபாவால் தன்னிடம் அனுப்பப்பட்ட குழந்தைகளுக்கு, பக்தியை போதித்த ஆச்சார்யராகவும், பிரேம ரத்தினமாகவும், சாயியிடம் பிரேம பக்தியையே வாழ்வாகக் கொண்ட உத்தம பெண்மணியாகவும் வாழ்ந்து மறைந்தாள்.

நெருப்பிலும், நீரிலும், நோயிலும், தீய பழக்க வழக்கங்களிலும் உழலும் மக்களை அவர்களின் கடைசி காலத்தில் பாய்ந்து வந்து காக்கும் பகவான் சாயியே, அன்னை இராதாகிருஷ்ணாமாயியின் தாயன்பை வியந்து போற்றுகின்றார்.

தன் அடியவரான ரேகேயிடம் பாபா இவ்வாறு கூறுகின்றார். "மக்கள் ஆயியை பற்றி என்ன அறிவார்கள்? அவர்களால் ஆயியின் உலகளாவிய தாயன்பை எப்படி புரிந்து கொள்ள முடியும்? உண்மையில் அவர்கள் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. நீ இந்த மக்களின் பேச்சைக் குறித்து கவலை கொள்ளாதே! அவள் உனக்கும் தாய், எனக்கும் தாய்!"









இந்த அற்புதமான வார்த்தை களை பாபாவிடம் இருந்து பெற்ற ஆதி சக்தியே நம் அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி. அவ்விதம் தன் வாழ்க்கையை சாயிக்காகவே அர்பணித்த தியாக தேவதை நம் அன்னை. அப்பேர்பட்ட நம் அன்னைக்கு உலகிலேயே முதல் முறையாக சிலை வடிவம் கொடுத்து பிரதிஷ்டை செய்த பெருமை கூத்தனூர் பாபா ஆலயத்தையே சேரும்.

கூத்தனூர் ஸ்ரீ சிவ சித்தர் சர்வமத வழிபாட்டு ஆலயத்தில் சாயி சமஸ்தானத்தின் அதி தேவதை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி யின் 105 வது சமாதித் திருநாள் மிகச் சிறப்பாக கொண்டா டப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா 34, கூத்தனூரில் சரஸ்வதி ஆலயத்தின் அருகே, ஊரின் எல்லையில் பச்சைபசேல் என்ற வயல் வெளியின் நடுவே, மிக அற்புதமாக அமைந்திருக்கின்றது நமது சாயிபாபாவின் ஆலயம்.

அவ்வாலய வளாகத் திலேயே, சாய்பாபாவின் பரம பக்தையும், சாயி சமஸ்தானத்தின் அதி தேவதை, ஜகன் மாதா, ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயி அன்னையின் முதல் முழு உருவச்சிலை பத்மாசன நிலையில் பிரதிஷ்டை செய்ய ப்பட்டு பக்தகோடிகளால்



வணங்கப்பட்டு வருகின்றது.

அன்னை, பகவான் சாயி நாதர் மகாசமாதி ஏற்ற இரண்டாண்டுகளுக்கு முன்பே மகாசமாதியை ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி இவ்வாண்டு அன்னையின் 105 வது மகாசமாதி ஆராதனை 30.11.21 செவ்வாய்கிழமை அன்று கார்த்திகை மாத கிருஷ்ணபட்ச ஏகாதசியன்று கூத்தனூர் சாய்பாபா ஆலயத்தில் மிக கோலாகலமாக நடந்தேறியது.

அன்னையின் சமாதி தின ஆராதனை "சீரடி சாது" ஸ்ரீ அச்சுதானந்தா சுவாமிகள் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. அதிகாலை 5 மணிக்கு பகவான் சாயிநாதனுக்கு காக்கட ஆரத்தியுடன் விழா இனிதே துவங்கியது. 9 மணிக்கு பெங்களூர் திரு. லட்சுமி நாராயண சர்மா குழுவினரால் ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம ஹோமமும், அதைத் தொடர்ந்து, அன்னை இராதாகிருஷ்ணமாயிக்கு விஷேச அபிசேக அலங்கார ஆரத்தி வழிபாடுகளும் மதியம் 1 மணிவரை மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.





மாலை 5 மணிக்கு, சென்னை, " சாய் தியானாலயா" நிறுவனரும், சாயி மகராஜ் குருவை தேடி இதழின் ஆசிரியருமான திரு.ஸ்ரீராம் அவர்கள் அன்னை, அதிதேவதையின் ஞான மார்க்கம் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். அதைத் தொடர்ந்து சகோதரி திருமதி, இந்திரா இராகவன் அவர்கள் அன்னையின் பக்தி மார்க்கம் பற்றி சொற்பொழிவாற்றி னார்கள்.

அதைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு, அன்னைக்கு மிகவும் பிடித்த சேவையான தீபம் ஏற்றுதல் நினைவாக ஆலயத்திற்குள் 1008 தீபங்கள் ஏற்றப்பட்டு பகவான் சாயி நாதருக்கு அன்னையின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரகாசமான தீப ஒளியில் ஆலயம் மின்ன, ஆசிரியர் அவர்கள் தியான நிகழ்வை நிகழ்த்தினார்கள். அதைத் தொடர்ந்து வந்திருந்த பக்தர்களில் பத்து பேர்கள் தேர்ந் தெடுக்கப் பட்டு அவர்களுக்கு சகோதரர் சாய் சரவணன் எழுதிய அன்னையின் உணர்ப்பூர்வமான அற்புதக் காவியம் "அதிதேவதை" இராதாகிருஷ்ணமாயி என்ற நூல் இலவசமாக வழங்கப்பட்டது.

அன்றைய நிகழ்ச்சியின் நிறைவு நிகழ்வாக, இரவு 8 மணிக்கு, பகவான் சாயி நாதருக்கும், அன்னைக்கும் இரவு ஆரத்தியும், மங்கள ஆரத்தி காட்டப்பட்டு விழா நிறைவு செய்யப்பட்டது.

விழாவிற்கு வந்திருந்த பக்தர்களுக்கு ஸ்ரீ சிவ சித்தர் சீரடி சாயிபாபா ஆலயத்தின் சார்பாக காலை, மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் விழா குழுவினர் சார்பாக ஆலய நிர்வாகி திரு.சுதாகரன் அவர்கள் நன்றி கூறினார்கள்.

ஆலயத்தின் சார்பில் அன்னையின் சரிதம், சாயிநாத சமஸ்தானத்தின் அதி தேவதை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி என்ற பெயரில் "அம்மையின் மைந்தன்" திரு.சாய் சரவணன் அவர்களை கருவியாகக் கொண்டு அன்னையே எழுதிய புத்தகம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அனைத்து பக்தர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் முதல் பதிப்பில் ரூ.250 விலையில் வெளிவந்த புத்தகம் தற்போது இரண்டாம் பதிப்பில்



கடுமையான முயற்சியால் ரூ.160 விலையில் பக்தர்களுக்கு வழங்கப்படுகின்றது. அனைவரும் புத்தகத்தை வாங்கி படித்து பயன் பெற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

"பண்பின் சிகரம்" பாபா மாஸ்டரின் பிறந்த நாள் விழா



பாபா பக்தியின் முன்னோடியும், பல பாபா ஆலயங்கள் உருவாக காரணகர்த்தாவாகவும், சிங்கப்பூர், மலேசியா, கனடா போன்ற நாடுகளில் பாபா பக்தியினை வளர்த்தவருமான நம் மரியாதைக்குறிய, "பண்பின் சிகரம்" திரு. அருணாச்சலம் என்ற பாபா மாஸ்டர் அவர்களின் 83 வது பிறந்தநாள் விழா 21.12.21 அன்று பாண்டிச்சேரியில் அவரது இல்லத்தில் எளிமையாக நடைபெற்றது.

இவ்விழாவில் அடியேனும் கலந்து கொண்டது மிகுந்த ஆனந்தத்தை அளித்தது. வயது முதிர்வின் காரணமாக அய்யாவை அதிகாலையிலேயே சென்று சிரமப்படுத்தக்கூடாது என நண்பகல் 11 மணிக்கு பாபா மாஸ்டர் அவர்களின் இல்லத்திற்கு சென்றபோது, அவர் அதிகாலையிலேயே எழுந்து தன்னை வாழ்த்த வரும் பக்தர்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டிருந்தார்.

அடியேன் சென்ற சமயம் அங்குபஞ் சர் மருத்துவர் திரு.செந்தில் குமரன் அவர்களும், பாபா மாஸ்டரின் இளமைக் கால நண்பர் திரு.சீனிவாச ராகவன் அவர்களும் மாஸ்டரிடம் ஆசி வாங்கிக்கொண்டிருந்தனர். நாம் சென்றதும் அவர்களிடம் நம்மை அறிமுகப்படுத்தி வைத்தார் மாஸ்டர்.

நாமும் பாபா மாஸ்டர் அவர்க ளுக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செய்து ஆசி வாங்கினோம். மாஸ்டர் அவர்கள் நமது அன்னதான சேவைக்கு நிதியும், பிரசாதமும் வழங்கி அன்புடன் அருகே அமர வைத்து புகைப்படம் எடுத்துகொள்ள வைத்து அளவளாவி மகிழ்ந்தார்கள்.

தனது கைபேசியில் அவராகவே ஒவ்வொருவரையும் அழைத்து, குறிப்பாக திருவேற்காடு பாபா ஆலய நிர்வாகி, கோபர்கான் கசலிபாபா சுவாமிகள் ஆகியோரை என்னிடம் அறிமுகப்படுத்தி அவர்களிடம்



என்னைப் பேச வைத்து மகிழ்ந்தார்கள்.

மதியம் கண்டிப்பாக உணவருந்தி செல்ல வேண்டும் என்று பாபா மாஸ்டரும், அவர்களது அன்புத் துணைவியாரும் அன்புக் கட்டளையிட மாஸ்டருடன் இணைந்து மதிய உணவருந்தியது பாபா எமக்களித்த பாக்கியமே!

பாபா மாஸ்டரும், அவரது துணைவியாரும் எம்மிடம் காட்டிய அன்பினாலும், அவர்கள் இட்ட அன்னத்தினாலும்,மனமும், வயிறும் நிறைய அவர்களிடம் பிரியா விடைபெற்று புறப்பட்டோம்.



யாம் அறிந்தவரையில் பாபா சேவகர்கள் அனைவரையும் ஏற்றத் தாழ்வுகள் இன்றி ஒன்றென கருதும் பண்புடையார் பாபா மாஸ்டர் ஒருவரே! அவரை "பண்பின் சிகரம்" என்றழைப்பதில் தவறேதும் இல்லை.

"மனிதர்கள் ஒத்திருப்பது என்பது உடலால் ஒத்திருப்பதன்று. இனிது பேசும் பண்பால் ஒத்திருப்பது" என்ற குறளின் விளக்கமாய் வாழ்ந்து வரும் பாபா மாஸ்டர் அவர்கள் வாழும் காலத்தே நாமும் வாழ்கின்றோம் என்பதே பெரும் பேறாகும். அவரை வாழ்த்த வயதும், அனுபவமும் நமக்கில்லையாயினும் வணங்கி மகிழ்கின்றோம்.

எல்லாம் வல்ல பகவான் சாயி பாபா அண்ணாருக்கு நீண்ட ஆயுள், ஆரோக்கியத்தை அளித்து இன்னும் பல்லாண்டுகாலம் எம்மைப் போன்றோரை பாபா பக்தியில் வழிநடத்திச் செல்ல வேண்டுமாய் வேண்டி விரும்பி பிரார்த்திக்கிறோம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!.

சேவா ரத்தினம்

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் – குறள் 1023 - தம் குடியை உயர்த்த வேண்டும் என்று முடிவெடுத்து உண்மையாகப் பொதுத் தொண்டு செய்வோருக்கு தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு தொண்டு செய்யும். என்கிறது திருக்குறள்.

கடந்த மாதம் எனது குருநாதரின் சமாதியை தரிசிக்க குடந்தை அருகே கொட்டையூரில் உள்ள ஸ்ரீ இராமார்பணம் டிரஸ்ட் க்கு சென்றிருந்தபோது, என்னுடன் வழிபாட்டில் கலந்து கொண்ட ஒருவரை சந்தித்தேன்.

அவராக வந்து என்னிடம் அறிமுகப்ப டுத்திக் கொண்டு, நமது பத்திரிக்கையைப் படிக்க நேர்ந்ததாகவும், மிகவும் நன்றாக இருந்ததாகவும் கூறி நம்மை வாழ்த்தி விட்டுச் சென்றார்.

நாம் மீண்டும் அவரை உணவருந்தும் இடத்தில் சந்தித்தபோது மரியாதை நிமித்தமாக அவர் யார் என்று தெரிந்து கொள்வதற்காக விசாரித்தபோது அந்த மனிதரின் உண்மையான சேவை நம் கவனத்திற்கு வந்தபோது வியந்து போனோம்.

இந்த காலத்தில் செய்கின்ற வேலைக்கு கூலி வாங்காமல் அதுவும் வயதான காலத்தில் ஓய்வெடுக்க நினைக்காமல் தன்னால் ஆன சேவையை செய்ய வேண்டும் என்று நினைந்து அதை செயல்படுத்தி வருவதை நினைத்தபோது நமது சேவை எல்லாம் ஒரு சேவையா என்று எண்ணத் தோன்றியது.

சென்னை முகப்பேரை சேர்ந்தவர் திரு. எஸ்.செகன்நாதன். கடந்த ஐம்பது வருடங்களாக பெயிண்டராக தொழில் செய்து வருகின்றார். தன்னுடைய அனுபவத்தில்



மிகப் பெரிய காண்டிராகட் வேலை எல்லாம் எடுத்து செய்திருக்கின்றார்.

இரண்டு குழந்தைகள், மனைவி ஆகியோருக்கு செய்ய வேண்டியதை திருப்தியாக செய்திருக்கின்றார். தற்போது



முகப்பேரில் சொந்த வீட்டில் வசித்து வரும் செகன்நாதன் 70 வது வயதை நெருங்கிக் கொண்டிருக்கின்றார்.

இந்த வயதிலும், ஏதாவது, ஆன்மீக சேவை செய்ய வேண்டும் என்ற உந்துதல் காரணமாக கடந்த 13 வருடமாக தனக்கு தெரிந்த பெயிண்டர் தொழிலையே சேவையாக மாற்றி தமிழகத் திற்குள் எங்கெல்லாம் உண் மையான ஆஸ்ரமங்கள் செயல்படுகின்றதோ அங்கெல்லாம் சென்று அவர்களுக்கு தேவைப்படும் பட்சத்தில் ஆஸ்ரமம் முழுக்க வண்ணம் பூசிக் கொடுப்பதை ஓர் சேவையாக செய்து வருகின்றார்.

தேவையான பெயிண்ட் மட்டும் வாங்கிக் கொடுத்துவிட்டால் போதும். கூலி என்று தனியாக யாரி டமும் வாங்குவதில்லை. போக வர பயணக்கட்டணம் மட்டும் கொடுத்தால் போதும். தமிழகம் முழுக்க எங்கு வேண்டுமானாலும் வந்து ஆஸ்ரமதிலேயே தங்கி தனது சேவையை செவ்வனே செய்து தருகின்றார். எஸ்.செகன்நாதன்.

இந்த வயதான காலத்தில் ஓய்வெ டுக்கலாமே, என்றால் எனக்கு இதுதான் ஓய்வே! மனசுக்கு திருப்தியாயிருக்கு என்கின்றார்.

தேவையுள்ள ஆஸ்ரம நிர்வாகிகள் இவரைப் பயன் படுத் திக்கொள்ளலாம்.



<u>தொடர்பு கொள்ள:</u>
எஸ்.செகன்நாதன்.
தொலைபேசி:
7598062074.

"ராஜபூஜிதர்" ஸ்ரீ குழந்தையானந்தர்

மகான்களால் பொலிவுற்றது நம் மகத்தான பாரத பூமி. அதிலும் தமிழகம் மகான்களாலும், ஞானியர்களாலும், சித்தர்களாலும் வழிநடத்தப் பெற்ற புண்ணிய பூமி. திருவருட்பிரகாச வள்ளலார், மகான் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி, சத்குரு ஸ்ரீ ஞானானந்த கிரி சுவாமிகள், மகாயோகி ஸ்ரீ அரவிந்தர், பிரான்ஸிலிருந்து இந்தியாவுக்கு வந்து இந்தியராகவே வாழ்ந்த ஸ்ரீ அன்னை எனப் பலர் சமய, ஆன்மீக மறுமலர்ச்சிக்கு, ஆன்ம உயர்வுக்கு உழைத்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தகுந்த ஒருவர் மகான் ராஜபூஜித ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள்.



இவர் மதுரையை அடுத்த சமயநல்லூரில், 1624ல் வாழ்ந்த ராமஸ்வாமி (எ) அண்ணாசாமி ஐயர் திரிபுரசுந்தரி என்ற தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இறையருளால் தோன்றிய இவரது இயற்பெயர் ராமன். ராமன் ஒளி பொருந்திய கண்களுடனும், காலில் சங்கு, சக்கரத் துடனும் மிக அழகாக இருந்தான்.

குழந்தை பிறந்தால் அதை மீனாட்சிக்கே அர்ப்பணித்து விடுவதாக முன்னரே பெற்றோர்கள் வேண்டிக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களுக்கு ஒரே சமயத்தில் ராமன், லட்சுமணன் என இரட்டையர் வாய்க்கவே, எந்தக் குழந்தையை அன்னைக்கு அர்ப்பணிப்பது எனக் குழப்பம் ஏற்பட்டது. அதனை அன்னையே தீர்க்கட்டும் என மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்துக்குச் சென்றனர் அப்போது ஆலய அர்ச்சகருக்கு அருள் வந்து, காலில் சங்கு சக்கரம் உள்ள குழந்தையை

விட்டுச் செல்லுமாறு ஆணை வந்தது.

அதன்படி குழந்தை ராமன் ஆலயத்தில் தனித்து விடப்பட்டான். அன்னை மீனாட்சியின் அருளாலும், அர்ச்சகர்களின் ஆதரவாலும் குழந்தை வளர்ந்தது. தக்க வயதில் உபநயனமும் செய்விக்கப்பட்டது. ராஜகோபாலன் என்ற தீட்சாநாமம் சூட்டப்பட்டது.

ஒருநாள், அன்னை மீனாட்சியைத் தரிசிக்கக் காசியிலிருந்து கணபதி பாபா என்ற மகான் வந்திருந்தார். ஒரு நல்ல சீடனைத் தேடிக் கொண்டிருந்த அவருக்குச் சிறுவன் ராஜகோபாலனைக் கண்டதும் அவனே தனக்கு சீடனாகத் தகுதியானவன் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆலயத்தினரின் அனுமதி பெற்று, பெற்றோரின் உத்தரவுடன் ராஜகோபாலனைக் காசிக்கு அழைத்துச் சென்றார் கணபதி பாபா.

அன்னை மீனாட்சி அருளால் பல ஆன்மீக, சமய நுணுக்கங்களை ராஜகோபாலன் ஏற்கனவே கற்றிருந்தாலும், குரு தீட்சையாக மேலும் பல விஷயங்கள் அவனுக்குப் போதிக்கப்பட்டன. குருநாதர் பல ஆற்றல்களையும் வழங்கி, பல்வேறு ரகசிய தீட்சைகளைச் சீடருக்கு அளித்தார். காசியில் ஸ்ரீ கணபதி பாபாவிடமிருந்து பல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார் ராஜகோபாலன். பின் குருவின் அனுமதியுடன் புனிதத் தலங்களை தரிசிப்பதற்காகத் தல யாத்திரை மேற்கொண்டார்.

காசியிலிருந்து புறப்பட்டவர் நேபாளம் சென்றார். நேபாள ராஜ வம்சத்தைச் சேர்ந்த இளவரசர் ஒருவர் அங்கு திடீரென இறந்துவிட்டார். அதனால் மன்னன் முதலானோர் அப்போது மிகுந்த வருத்தத்துடன் இருந்தனர். சுவாமிகளின் மகிமையைப்பற்றி முன்பே அறிந்திருந்த அவர்கள் சுவாமிகளின் பாதம் பணிந்து தங்கள் குறையைத் தீர்க்கக் கோரிக் கதறினர்.

சுவாமிகள், ராஜகுமாரனின் பிணம் வைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றார். உள்ளே கதவைத் தாளிட்டுக் கொண்டுவிட்டார். அனைவரும் சுவாமிகள் செய்வது நல்லதுக்குத்தான் என்று பொறுமையாகக் காத்திருந்தனர். நாட்கள் நகர்ந்தன. மூன்று நாள் கழித்து, விடியற்காலை வேளையில், சுவாமிகள் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். சற்று நேரத்தில் இறந்து கிடந்த ராஜகுமாரன், தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தவன் போல வெளியே வந்தான்.

மன்னர் உட்பட அனைவரும் வியப்புற்றனர். நன்றி கூறி சுவாமிகளின் பாதம் பணிந்தனர். 'எல்லாம் குருவருள்' என்று கூறிவிட்டுச் சுவாமிகள் புறப்படத் தயாரானார். சுவாமிகளின் மகிமையை உணர்ந்த அரச வம்சத்தினர் ஸ்ரீ சுவாமிகள் தங்களுடன் சில காலம் தங்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

சுவாமிகள் உடன்பட்டுச் சில நாள் அங்கே தங்கினார். மன்னருக்கும் மக்களுக்கும் பல்வேறு தத்துவங்களைப் போதித்தார். மன்னர் குடும்பத்தினரும் சுவாமிகளுக்கு தங்கள் அன்புக் காணிக்கையாக மகர கண்டியையும், ருத்திராட்ச மாலையையும் வழங்கி ஆசி பெற்றனர்.

பின்னர் சுவாமிகள் காசி க்ஷேத்திரத்திற்குச் சென்று சில காலம் வசித்தார். தனது சீடன் பல்வேறு ராஜ குடும்பத்தாரால் பூஜிக்கப்படுவது கண்டு மகிழ்ந்த குருநாதர் கணபதி பாபா, சீடனுக்கு 'ராஜபூஜித' என்ற சிறப்புப் பெயரை அளித்துக் கௌரவித்தார்.

அதுமுதல் 'ராஜபூஜித ராஜகோபால சுவாமிகள்' என்று பக்தர்களால் அவர் அன்புடன் அழைக்கப்பட்டார். அவர் முதுகில் லிங்கம் போன்ற மூன்று குழிகள் இருந்ததால் 'த்ரைலிங்க சுவாமிகள்' என்றும் அழைக்கப்பட்டார். அவரை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சந்தித்து உரையாடியிருக்கிறார். பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தரும் சந்தித்து ஆசி பெற்றிருக்கிறார்.

சில வருடங்களில் கணபதி பாபா மகா சமாதி அடைந்தார். அவர் சமாதிக்குப் பின் பல ஆண்டுகாலம் நிஷ்டையில் இருந்த சுவாமிகள், தானும் அங்கேயே சமாதி ஆனார். அது தான் அவரது முதல் சமாதி ஆலயமாகும். அது காசியில் பஞ்சகங்கா காட் அருகே அமைந்துள்ளது.

அடுத்தடுத்த அவதாரங்கள்:

அதன் பின் சமாதியிலிருந்து அடுத்த அவதாரமாக மீண்டும் தோன்றிய சுவாமிகள், பல தலங்களுக்கும் சென்று இறுதியில் தென்காசிக்குச் சென்று சில காலம் வசித்தார், அங்கேயே சமாதி ஆனார். அது 'குழந்தை வேலப்பர்' சமாதி என்று அழைக்கப்படுகிறது. பின்னர் மறுபடியும் அவதரித்துத் திருண்ணாமலைக்குச் சென்று நிஷ்டையில் ஆழ்ந்து அங்கேயே சமாதி கொண்டார்.

தொடர்ந்து நான்காவது அவதாரமாகத் தோன்றியவர், மதுரைக்கு வந்து சேர்ந்தார். குள்ளமான உருவம், பருத்த தொந்தி, வட்ட,முகம் சாளவாய் ஒழுகும் வாய், மழலைப் பேச்சு என்று சுவாமிகளின் தோற்றம் பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. குழந்தையைப் போன்ற தோற்றம். சிரித்த ஆனால் மரியாதையைத் தோற்றுவிக்கும் முகம் என்பதாக சுவாமிகளின் உருவம் அமைந்திருந்தது. 'கண்ணுரெண்டும் எச்சி, கறந்த பாலும் எச்சி ' என்று அடிக்கடிச் சொல்லுவார். குழந்தைபோல குழறிக் குழறிப் பேசுவார் என்பதாலேயே அவருக்கு 'குழந்தையானந்தர்' என்ற பெயர் நிலைத்துவிட்டது.

சுவாமிகள், தன்னை நாடி வந்தவர்களின் துயரங்களைப் போக்கினார். தஞ்சம் என்று வந்தவர்களின் வாழ்க்கைப் பாதையை மாற்றி அமைத்தார். அதே சமயம், தகுதியுடையோருக்கு மட்டுமே அருள் புரியவேண்டும் என்ற அருள் நோக்கம் கொண்டிருந்தார். அதனால் தம் தபோபலத்தை அனைத்து மாந்தருக்கும் காட்டாமல், சாதாரண மனிதர் போலவே பழகி வந்தார்.

மதுரை மட்டுமல்லாது திண்டுக்கல், பழனி, தென்காசி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் எனத் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் செய்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தகுதியுள்ள அன்பர்களின் வீட்டில் மட்டுமே சுவாமிகள் தங்குவார். அறிவுரை வழங்குவார், குறைகளைத் தீர்ப்பார். மற்றவர்களிடம் ஒன்றும்



குழந்தையானந்தர் - மூன்று அவதாரங்கள்

வெளிக்காட்டாது சாதாரண மனிதர் போலவே பழகுவார். இது அவரது இயல்பாக இருந்தது.

இருவரும் ஒருவரே !

ஒருமுறை பக்தர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தார் குழந்தையானந்த சுவாமிகள். அந்த வீட்டில் சுவாமிகளின் திருவுருவப் படத்தோடு த்ரைலிங்க சுவாமிகளின் படத்தையும் வைத்து வழிபட்டு வந்தனர். அதைப் பார்த்த சுவாமிகள், "அடேய், எனது அந்த வேஷத்தையும் வைத்திருக்கிறாயா? பேஷ், பேஷ்" என்றார் புன்னகையுடன். இதன் மூலம் குழந்தையானந்தரின் பூர்வஜென்மமே ஸ்ரீ த்ரைலிங்க சுவாமிகள் என்ற உண்மையை பக்தர்கள் அறிந்துகொண்டனர்.

மீனாட்சி மைந்தன்:

தினந்தோறும் அன்னை மீனாட்சி ஆலயத்திற்குச் சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள். அன்னை மீது பல்வேறு பாடல்களை அவர் புனைந்திருக்கிறார்.

பராத்பரி பரமேச்வரி வர தாயகி ஞானேச்வரி மதுரா நாயகி மந்த ஹாசினி சோமசுந்தரேச ப்ரிய நாயகி

ஆலவாய் மதுராபுரி தன்னிலே

காவலாய் அமைந்து கருணை செய்தாய் ராஜகோபாலன் என் அன்பிற்குரியாளே அன்னையே நாயகி அகிலாண்டேச்வரி

என்ற ஸ்ரீ சுவாமிகளால் இயற்றப் பெற்ற பாடலை எப்போதும் பக்தர்கள் பாடுவது வழக்கம். சுவாமிகள் அன்னை மீனாக்ஷி மீது 'மீனாக்ஷி அஷ்டகம்' என்ற துதி நூலையும் இயற்றியிருக்கிறார்.

அற்புதங்களும் அதிசயங்களும்:

சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் பலப்பல. அவற்றுள் ஒன்று இன்னமும் அவரது பக்தர்களால் நினைவு கூரப்படுவது.

நகராத ரயில் நகர்ந்தது:

ஒருநாள் மதுரை ரயில் நிலையத்தில் சென்னைக்குச் செல்ல இருந்த ரயில் ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டார் குழந்தையானந்தர். அது வெள்ளைக்கார



அதிகாரி ஒருவருக்கு ரிசர்வ் செய்யப்பட்டிருந்த முதல் வகுப்புப் பெட்டி. தனக்கென ரிசர்வ் செய்த அந்த இடத்தில் குழந்தையானந்தர் அமர்ந்திருந்ததைப் பார்த்ததும் அந்த அதிகாரி கடுங்கோபம் கொண்டார். உடனடியாக அங்கிருந்து எழுந்து கொள்ளுமாறு சுவாமிகளை அதிகாரம் செய்தார். ஆனால் சுவாமிகள் காதில் வாங்கிக் கொள்ளாமல் மௌனமாக அமர்ந்திருந்தார்.

அதிகாரி, ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று புகார் செய்தார். அப்போது கல்யாணராம ஐயர் என்பவர் ஸ்டேஷன் மாஸ்டராகப் பணியாற்றி வந்தார். அவர் சுவாமிகளைப் பரிசோதித்து, டிக்கட் இல்லை என்பதால் கீழே இறக்கிவிட்டார்.

சுவாமிகள் பிளாட்ஃபாரத்தில் அமர்ந்துவிட்டார். பச்சைக்கொடி காட்டப்பட்டது. டிரைவர் எஞ்சினை இயக்கினார். ரயில் கிளம்பவில்லை. பலமுறை முயன்றும் பலனில்லை. அப்போது அங்கு வந்த சுவாமிகளின் மகிமையை அறிந்த சிலர், ஸ்டேஷன் மாஸ்டரிடம் சுவாமிகளின் பெருமையை எடுத்துக்கூறி அவரிடம் மன்னிப்புக் கேட்கும்படி அறிவுறுத்தினர். கல்யாணராம ஐயரும் சுவாமிகளைப் பணிந்து மன்னிப்பு வேண்டினார். சுவாமிகளை முதலில் அமர்ந்திருந்த ஆசனத்திலேயே அமர்த்தினார். வெள்ளைக்கார அதிகாரிக்கு மாற்று ஏற்பாடு செய்தார்.

உடனே சுவாமிகள் சந்தோஷம் பொங்க "டேய், ரயில் இனிமேல் போகும்டா" என்றார்.

உடனே டிரைவர் எஞ்சினை இயக்க, அதிசயமாக, ரயில் எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் கிளம்பியது!

திண்டுக்கல்லைச் சேர்ந்தவர் பரசுராம ஐயர். குழந்தையானந்தரின் தீவிர பக்தர். சுவாமிகளுக்கு மிக நெருக்கமானவர். சீதாலட்சுமி அம்மாள் அவரது சகோதரி. அவருக்கும் சுவாமிகள் மீது மிகுந்த பக்தி உண்டு. சுவாமிகள் திண்டுக்கல்லுக்கு விஜயம் செய்தபோது அவருக்குத் தேவையான பணிவிடைகள் பலவற்றைச் செய்தவர்.

அவருக்குத் திடீரென முதுகில் ஒரு பெரிய கட்டி ஏற்பட்டது. பல வைத்தியங்களை மேற்கொண்டும் குணமாகவில்லை. அதனால் அவர் மதுரை சென்று ஸ்ரீ சுவாமிகளை தரிசித்து வேதனையைக் கூறி அழுதார்.

உடனே சுவாமிகள், அந்த அம்மாளுக்கு திருநீறு அளித்து ஆசி கூறிவிட்டு, "விரைவில் குணமாகி விடும். எதற்கும் கவலைப்படாதே!" என்று ஆறுதல் கூறி, தான் அளித்த திருநீற்றை தினந்தோறும் கட்டிமீது தடவி வருமாறு சொல்லி

அனுப்பினார். அந்த அம்மாளும் மிகுந்த பயபக்தியோடு அந்தத் திருநீற்றைக் கட்டிமீது பூசி வந்தார். ஆச்சரியப்படும் விதத்தில் ஒரு மாதத்துக்குள் கட்டி உடைந்து அந்தப் பிளவை நோய் நீங்கியது.

நாளடைவில் குழந்தையானந்த சுவாமிகளின் முதுகில் மிகப்பெரிய மூன்று கட்டிகள் தோன்றி அவரை வருத்தின. ஒரு சமயம் சீடர்கள் சிலர், சுவாமிகள் ஏதாவது சித்துக்கள் செய்து அதனை நீக்கிக்கொள்ளக் கூடாதா எனக் கண்ணீர் மல்கக் கேட்டனர்.

அதற்குச் சுவாமிகள், "இதுவரை மூன்று ஆகிவிட்டது என்பதற்கான அடையாளச் சின்னமடா இது! நான்காவதற்கு வேளை வந்துவிட்டது" என்று பதில் கூறினார். இதுவரை தாம் மூன்று முறை சமாதி ஆகி யிருக்கிறோம். இப்போது நான்காவது சமாதி கொள்ளும் வேளை வந்து விட்டது என்பதே அவர் கூற வந்தது. ஆனால் பக்தர்களால் அந்த சூட்சுமத்தினைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

அது 1932ம் வருடம். நவராத்திரி சமயம். மதுரை மாநகரின் எல்லா இடங்களும் விழாக் கோலம் பூண்டி ருந்தன. சுவாமிகள் தங்கியிருந்த மடத்திலும் சிறப்பான பூஜைகள், அவர் பூஜை செய்துவந்த ஸ்ரீ சக்ரத் திற்கு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன. சரஸ்வதி பூஜை நன்னாளும் வந்தது. தனது பக்தர்கள் அனைவரையும் குடும்பத்தோடு விசேஷத்தைக் கொண்டாடுங்கள் என்று கூறி அனுப்பிவிட்டு, ராமலிங்கய்யர் என்னும் அணுக்கத் தொண்டர் வீட்டிற்குச் சென்று தங்கி விட்டார் சுவாமிகள்.

அன்று விஜயதசமி. கீழே பூஜை நடந்து கொண்டிருந்தது. சுவாமிகள் மாடியில் படுத்துக் கொண்டிருந்தார். பூஜை முடிய மதியத்திற்கு மேல் ஆகிவிட்டது. அபிஷேகப் பாலை எடுத்துக்கொண்டு ராமலிங்க ஐயரும், அவரது தாயாரும் மாடிக்குச் சென்றனர். சுவாமிகள் உறங்கிக் கொண்டிருந்தார்.

இருமுறை அழைத்தும் பதில் தராதவர், மூன்றாம் முறை ஐயர் உரக்கக் குரல் எழுப்பவும் விழித் துக்கொண்டார். நைவேத்யப் பாலைப் பருகும்படி இருவரும் வேண்டிக்கொண்டனர். சுவாமிகள் வாயைத் திறந்தார். இரண்டு வாய் உள்ளே போயிற்று. மூன்றாவது வாய்ப் பால் வெளியில் வழிந்தது. சுவாமிகள் தமது சுவாசத்தை வெளிவிடாமல் உந்திச் சுழியிலேயே அடக்கிக்கொண்டு மகாசமாதி ஆகிவிட்டார்.

தகவல் பரவியது. அனைவரும் வந்து ஸ்ரீ குழந்தையானந்த சுவாமி களைத் தொழுதனர். திருமந்திர முறைப்படிச் சடங்குகள் நடந்தேறி மதுரை அரசரடியில் அவரது சமாதி அமைக்கப்பட்டது.

மதுரை அரசரடியில் அமைந் திருக்கும் இவரது ஜீவசமாதி ஆலயத்திலிருந்து இன்றும் சூட்சும ரீதியாக பக்தர்களுக்கு ஸ்ரீமத் குழந் தையானந்த சுவாமிகள் உதவி வருகிறார் என்பது அடியவர்களின் நம்பிக்கை. மகானை மனப்பூர்வமாக வழிபடுபவர்களுக்கு எல்லா நன்மையும் பெருகும் என்பது சத்தியமான உண்மை.

குற்றம் காணாதீர்!

மற்றவர்களை மதிப்பிடுவது அகந்தையின் செயல். அது ஒரு வகை திமிராகும். மற்றவர்களை நாம் மதிப்பிடும்போது, அது, நம்மிடமுள்ள குறைகாணும் மனப்பான்மையை வளர்க்கும்.

கழுகு மற்ற பறவைகளை விட மிக உயரத்தில் அழகாக வட்டமிட்டுப் பறக்கும். அதன் எடையைவிட பல மடங்கு அதிகமுள்ள இரையை தூக்கிச்செல்லும். அதன் பார்வை திறன் நீண்ட தூரத்திற்கு செல்லும். ஆனால் அது புனிதமான நல்ல பொருட்களின் மீது தன் பார்வையை செலுத்தாது. அழுகிய பிணத்தின் மீது மட்டுமே செலுத்தும்.

சாதாரண ஈ உட்காருவதற்கு கெட்ட பொருட்களையே நாடும். ஆயினும் தேனியோ, புதிய மலர்களில் இருக்கும் தேனையே நாடும்.

உங்களுக்கு பார்ப்பதற்கு கண் இருப்பதால் மற்றவர்களிடம் இருப்பதை பார்க்கின்றீர்கள். உங்களுக்கு அழகிய கண்கள் இருந்தால், நீங்கள் அழகை மட்டுமே காண்பீர்கள்.

பூமியில் பிறந்த ஒவ்வொருக்கும் ஏதாவது ஒரு குறை இருக்கும். குறையே இல்லாதவர் இந்த பூமியில் பிறப்பதில்லை. எனவே பிறரிடம் குற்றம் காண முற்படாதீர். பணிவுடன் இருங்கள். அதற்குமுன் உங்கள் குற்றம்குறைகள் என்னவென்று அறிந்து அதை களைய முற்படுங்கள்.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) 300 நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது, ஸ்ரீலஸ்ரீ அஸ்தலிங்கசாமி சித்தர் சீவபீட சமாதி தரிசனம்.

ஸ்ரீலஸ்ரீ அஸ்தலிங்கசாமி சித்தர் சீவபீட தரிசனம்

சுவாமிகள் திருச்செங்கோடு என்னும் ஆன்மீக பூமியில் அவதரித்தார். அவருக்கு பெற்றோர் இட்ட இயற்பெயர் இராமச்சந்திரன் என்பதாகும்.

சுவாமிகள் தனது சிறுவயதில் இருந்தே தம் உள்ளத்து எழுச்சியால் தோன்றிய ஆன்மீக பற்றுதலோடு வளர்ந்தார்கள். தம் கையில் எப்போதும் சிறிய சிவலிங்கம் ஒன்றை வைத்துக் கொண்டே இருந்ததனால் மக்கள் அவரை அஸ்தலிங்கசாமி என்று அழைத்தனர்.

இளமையிலேயே பல சிவத் தலங்களை தரிசித்த சுவாமிகள் கைலாயத்தை தரிசிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டு திருக்கைலாசத்தை தரிசனம் செய்து விட்டு, பின்பு காசியை



அடைந்து அங்கேயே தங்கி சிவத் தொண்டு ஆற்றத் தொடங்கினார்.



பின்னர் சிவபெருமானின் உத்திரவை ஏற்று தமிழகம் வந்து, இங்குள்ள சிவத்தலங்களை தரிசித்தார். மறைந்து கிடந்த சிவாலயங்களின் அருமை, பெருமைகளை மக்களிடத்தில் தெரியப்படுத்தி ஆலய வழிபாட்டை மக்களிடம் விளக்கிக் கூறி சிவத்தொண்டு புரிந்தார்.

பல சிவாலயங்களுக்குச் சென்ற சுவாமிகள் இறுதியாக, ஆன்மீக பூமியான காஞ்சி மாநகரில் உள்ள ஐய்யன் பேட்டையில் உள்ள மடத்திற்கு வந்தடைந்தார்.

ஒரு நாள் சுவாமிகளின் கனவில் தோன்றிய ஈசன், இனி நீ எங்கும் அலைய வேண்டாம். இத்திருத்தலத்திலேயே தங்கியிருந்து மக்களுக்கு நற்காரியங்களை செய்து கொண்டு இங்கேயே சீவ சமாதி ஆவாயாக! என்று அருளினார்.

ஈசன் கனவில் அருளியபடியே நடந்தது. சுவாமிகள் அங்கேயே தங்க ஆரம்பித்தார். தன்னை நாடி வரும் மக்களுக்கு தன் கையில் இருக்கும் சிவலிங்கத்தை அவர்களை மூன்று முறை சுற்றி நெற்றியில் திருநீறை இடுவதின் மூலமே அவர்களது நோய் நொடிகளையும், பிரட்சனைகளையும் தீர்த்து வைத்தார்.

சுவாமிகளின் தெய்வீக சக்தியை உணர்ந்த மக்கள் அவரை தெய்வமாகவே போற்றி வழிபட்டனர்.

நமது ஸ்ரீ அஸ்துலிங்க சுவாமிகளுடன், ஸ்ரீ ஞானமணி சுவாமிகள், ஸ்ரீ பொட்டி சுவாமிகள், இவர்கள் மூவரும் அய்யன் பேட்டையில் உள்ள மடத்தில் இரவில் ஒன்றாக உறங்குவார்கள். விடிந்ததும் அவர்கள் வெவ்வேறு பகுதிக்குச் சென்று விடுவார்கள்.

1852 ஆம் ஆண்டு வைகாசி மாதம் சுவாதி நட்சத்திரம் அன்று தான் சீவசமாதி ஆகப்போவதாக தன்னுடைய சீடர்களிடம் முன்கூட்டியே அறிவித்து அதன் படியே தவத்தில் அமர்ந்து சீவசமாதி அடைந்தார் சுவாமிகள்.

சுவாமிகள் சீவசமாதி அடையும் நேரத்திலும் லிங்கத்தை கைகளில் வைத்தவாறே சீவசமாதி ஆகியிருந்தார். அவரது சீடர்கள், சுவாமிகளின் கையில் இருக்கும் லிங்கத்தை எடுக்க எவ்வளவோ முயன்றும் எடுக்க முடியவில்லை. ஆகையால் அப்படியே சமாதி



செய்வித்தனர்.

சுவாமிகள் தங்கியிருந்த மடம் அவரின் சமாதியின் அருகிலேயே இருக்கின்றது. வாழ்வில் ஒரு முறையேனும் சீவ சமாதிகளை தரிசனம் செய்து நமது கர்ம வினைகளை குறைத்துக் கொள்வோம்.

சீவபீட முகவரி:

ஸ்ரீலஸ்ரீ அஸ்தலிங்கசுவாமி சீவபீட ஆலயம், ஐய்யன்பேட்டை, சின்ன காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம் பேரூந்து நிலையத்தில் இருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் முத்தியால் பேட்டை அடுத்து வரும் ஐய்யன் பேட்டை மெயின் ரோட்டிலேயே அம்மன் கோவில் காணப்படும். அதன் எதிரிலேயே நம் சித்தரின் சீவபீடம் அமைந்துள்ளது.

பேரூந்து மார்க்கம்:

சென்னை - ஸ்ரீ பெரும்புத்தூர் காஞ்சிபுரம்.

சென்னை வாலாஜாபாத் - காஞ்சிபுரம்

இறங்குமிடம்:

ஐய்யன்பேட்டை பேரூந்து நிறுத்தம்.

புகைவண்டி மார்க்கம்:

சென்னை - காஞ்சிபுரம்

இறங்குமிடம்:

காஞ்சிபுரம் இரயில் நிலையத்தில் இருந்து ஷேர் ஆட்டோ மூலம் சீவபீடத்தை அடையலாம்.

சித்தர்களின் சீவ சமாதியை தரிசிப்போம்!

சிக்கலின்றி வாழ்வோம்!



எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,

17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர். ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.

திருமதி.சாந்தி.மந்தைவெளி.ரூ.2500.

திருமதி. வாழ்க வளமுடன் சுமதி. பெரியார் நகர்.ரூ.1000.

திருமதி. சுமதி ராமமூர்த்தி கொளத்தூர். ரூ.1000.

திருமதி. இந்திரா வெங்கடாசலம். மந்தைவெளி.ரூ.1000.

திருமதி.சிவகாமி நடராஜன். அம்பத்தூர்.ரூ.1000

திருமதி.நித்யா. கூடுவாஞ்சேரி ரூ.1000.

திரு.சுடலைமுத்து.தூத்துக்குடி.ரூ.600./

திரு.எஸ்.சிவராமன்.பெரம்பூர்.ரூ.600.

திரு.சாந்தமூர்த்தி குடும்பத்தார் போரூர்.ரூ.500.

திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.



திரு.துரைச்சாமி குடும்பத்தார். கோவை.ரூ.500.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார்.பெரவள்ளூர். ரூ.500.
திருமதி.சாந்தி.மந்தைவெளி.ரூ.500.
திருமதி.தீபா கணேஷ்.அயனாவரம். ரூ.500
செல்வி. வசுந்தரா.மயிலை. ரூ.500.
திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.400.
திரு.பத்ரிநாராயணன்.நெய்வேலி. ரூ.300
திருமதி.யாமினிபிரியா குடும்பத்தார். அயனாவரம்.ரூ.300.
திரு.விஜயன்.சி.சி.பேங்க் மேனேஜர்.பெரியார் நகர்.ரூ.200.
திருமதி.வசந்திபாபு.அயனாவரம். ரூ.200.
திருமதி. ஜெயந்தி தியாகராஜன். மாவுத்தன்பட்டி.ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்-டிராவல்ஸ். பெரியார் நகர்.ரூ.200.
திருமதி.பத்மா நாகராஜன். சண்முகபுரம்.ரூ.200.
திரு.பாலசுப்பிரமணியன்.திட்டை ரூ.200
திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு.ரூ.200
திரு.கிருஷ்ணமூர்த்தி.கோவை.ரூ.150.
திருமதி.விஜயலட்சுமி.அயனாவரம் .ரூ.100.
திருமதி.உமா முருகன்.சின்னாளப்பட்டி. ரூ.100.
திருமதி.சாந்தி மோகன்.AYK ரூ.100.
திருமதி.அபிராமிஅசோக் AYK. ரூ.100.
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK.ரூ.100
திருமதி. வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம். மளிகை. ரூ



திருமதி.சரண்யா. சென்னை.ரூ.50–
திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர்.அரிசி.1 மூ
திருமதி.திலகா அன்பு, கோவை. ரூ.1000
திருமதி.சுகன்யா துரைராஜ், சென்னை.ரூ.500
திருமதி.வெற்றிச்செல்வி, அயனாவரம்.ரூ.500
திரு.விஜய் ஆனந்த, அயனாவரம் ரூ.201

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு.சுந்தரேசன்.கொட்டையூர்.ரூ.500.
திருமதி.சுமதி. கொளத்தூர்.ரூ.500.
திரு.தீபக் சாய், கோவை.ரூ.400.
திருமதி.சூர்யா. புழல். ரூ.400.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200.
திரு.கிருஷ்ணமூர்த்தி.கோவை.ரூ.200.
திரு. துரைச்சாமி.கோவை.ரூ.100.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.